Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ




RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து

(C/1325)

முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 10 வெள்ளிக்கிழமை (23.03.2012) பக்கங்கள் 16 ஓசை - 174




சிங் சி.ஐ.ஏ முகவர்

08



தமிழ் இராஜதந்திரம்

06



இவரின் பேச்சால் சர்ச்சை

12



பாலியல் வன்முறைகளைத் தடுக்க

03

## பொது மக்கள் பலி புலிகளும் பொறுப்பு

(கொழும்பு)

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது பொதுமக்கள் கொல்லப்பட்டமைக்கு புலிகளும் பொறுப்பே என்று தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார் என கொழும்பு தினகரன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போது யுத்தப் பிரதேசத்துக்குள் பொது மக்கள் அகப்பட்டிருந்தனர். அவர்களை அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் செல்லப் புலிகள் அனுமதிக்கவில்லை.

எனவே பொதுமக்கள் கொல்லப்பட்டதற்கு புலிகளும் பொறுப்பே என்று குறிப்பிட்டுள்ளார்.

எனவே இரண்டு தரப்பினரின் யுத்த நடவடிக்கைகளும் புலனாய்வு செய்யப்பட வேண்டும் என்பது கூட்டமைப்பின் நிலைப்பாடு.யுத்தத்தின் இறுதி நாட்களில் அரசுக்கும் புலிகளுக்கும் நாம் பல்வேறு வேண்டுகோளை விடுத்திருந்தோம். பொதுமக்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வெளியேறுவதற்கு அவகாசம்

15 ஆம் பக்கம் பார்க்க

## சுகாதாரப் பரிசோதகர்கள் மீண்டும் போராட்டம்

(யாழ்ப்பாணம்)


பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நான்கு அம்சக் கோரிக்கையை முன்வைத்து நாடளாவிய ரீதியில் இன்று முதல் மீண்டும்போராட்டத்தில் குதிக்கின்றனர்.

ஏற்கனவே தெழிற்சங்கப் பேராட்டத்தில் ஈடுபட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதர்களுக்கு 21 நாட்களுக்குள் தமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கடந்த 3ஆம் திகதி அரசு உறுதி மொழி வழங்கியிருந்தது. ஆனால் அரசு சம்சுமதித்தவாறு பிரச்சினையைத்

15 ஆம் பக்கம் பார்க்க

# நிறைவேறியது பிரேரணை

## ஜெனிவா சலசலப்பு ஓய்ந்தது



(ஜெனிவா)

இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட அமெரிக்கப் பிரேரணை நேற்றைய தினம் வாக்கெடுப்பின் பின்னர் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கத் தீர்மானத்தின் மீதான நேற்றைய வாக்கெடுப்பில் பிரேரணைக்கு ஆதரவாக ஒன்பது மேலதிக வாக்குகள் கிடைத்ததைத் தொடர்ந்து இப்பிரேரணை மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அமெரிக்கா முன்மொழிந்திருந்த இப்பிரேரணை மீதான பொது விவாதம் இடம்பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற வாக்கெடுப்பில் 24 நாடுகள் ஆதரவாகவும், 15 நாடுகள் எதிர்த்தும், வாக்களித்துள்ளன. 8 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. இந்தியா இப்பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தது. பேரவைத் தலைவர் Laura Dupuy Lasserre அமெரிக்கா

15 ஆம் பக்கம் பார்க்க

## வரவேற்கிறது கூட்டமைப்பு

(ஜெனிவா)

ஜெனிவா மனித உரிமை கூட்டத்தொடரில் அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்ட, இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் என்பவற்றை ஊக்குவிக்கும் பிரேரணை நிறைவேற்றப்பட்டதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்றுள்ளது.

இப்பிரேரணையானது இன வேறுபாடின்றி இலங்கையர் அனைவருக்கும் நன்மையளிக்குமென நாம் நம்புகிறோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 15 நாடுகள் ஆதரவு; அதுவே திருப்தி

(ஜெனிவா)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் பதினைந்து நாடுகளாவது எமக்குச் சார்பாக வாக்களித்தமை பெரும் திருப்தியளிக்கிறது என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்நாடுகள் மீது பல்வேறு வகையில் செலுத்தப்பட்ட கடும் அழுத்தங்களுக்கு மத்தியிலும் 15 நாடுகள் இலங்கைக்கு சார்பாக வாக்களித்தமை எமக்கு பெரும் திருப்தியளிக்கிறது. அந்நாடுகளுக்கு எமது நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம். வாக்களிப்பில்

15 ஆம் பக்கம் பார்க்க

## இன நல்லிணக்கத்துக்கு புத்துயிர் கொடுக்கும்

### ஹிலாரி நம்பிக்கை

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் 27 வருட யுத்தத்திற்கு பின்னர் இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் நல்லிணக்க செயற்பாடுகளுக்கு புத்துயிரளிக்கும் என அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலாரி ஹிலின்டன் தெரிவித்தார்.

இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள

15 ஆம் பக்கம் பார்க்க

## படை வீரர் பலி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்ப் பகுதியில் கிணறு ஒன்றில் தவறி வீழ்ந்து நீரில் மூழ்கி இறந்ததாகத் தெரி விக்கப்படும் இராணுவ வீரர் ஒருவருடைய சடலம் நேற்று முற்பகல் யாழ். போதனா வைத்தியசாலையில கோப்பாய் பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் இராணுவ முகாம் ஒன்றில் கடமையில் இருந்த குறித்த இராணுவ வீரர் நித்திரை மயக்கம்

15 ஆம் பக்கம் பார்க்க

## இந்தியாவுடன் உறவு தொடரும்

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான நட்பில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்றும் நீண்டகாலமாக நிலவி வரும் வரலாற்றுச் சிறப்புமிக்க நட்பு வழமை போல் தொடரும் என்றும் தகவல் ஊடகத்துறை பதில் அமைச்சரான லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜெனிவாவில் அமெரிக்காவின் பிரேரனைக்கு இந்தியா எதிர்ப்புத் தெரிவிக்காததால் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான நட்பில் பாதிப்பு எற்படுமா என்று ஊடகவியலாளர் கேள்வி எழுப்பினார். இந்தியா தற்போது மிகவும் இகட்டான ஒரு நிலையை எதிர் கொண்டுள்ளது.

பல தேர்தல்களை அந்த நாடு நெருங்கிய சிக்கல் நிலையில் உள்ளது. இவ்வாறான வேளையில் அந்த நாட்டால் இந்த விடயத்தில் எங்களுக்கு உதவ முடியாது என்பதை நாம் நன்கு உணர்கின்றோம். இந்தியாவின் நிலைப்பாடு எங்களுக்கு ஏற்பட்டிருந்தால் எங்களுக்கும் அவ்வாறான ஒரு செயற்பாட்டையே மேற்கொள்ள நேரிடும்.

15 ஆம் பக்கம் பார்க்க

## அநாதரவான யுவதி யாழ்.நகரில் கைது

(யாழ்ப்பாணம்)

அசாதாரண நிலையில் யாழ். பஸ் நிலையத்தில் நின்ற 18 வயதுடைய யுவதியை அரியாலை பாதுகாப்பு இல்லத்தில் அனுமதிக்குமாறு யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா. கணேசராசா உத்தரவிட்டுள்ளார்.

நேற்று மாலை 4.00 மணியளவில் குறித்த பெண் பஸ் நிலையத்தில் நின்றபோது யாழ்.பொலிஸ் நிலைய சிறுவர்,

15 ஆம் பக்கம் பார்க்க

# யாழ். கோட்டை சுற்றாடல் மெருகூட்டப்படவுள்ளது

## மாநகர சபை நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டையைச் சுற்றிப் புனரமைப்பு வேலைகளை மேற்கொள்ளவென 60 மில்லியன் ரூபா நிதியினை அரசாங்கம் யாழ். மாநகரசபைக்கு ஒதுக்கியிருப்பதாகவும் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். மாநகர சபையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

இதன் ஆரம்பகட்ட நடவடிக்கையாக யாழ். கோட்டையைச் சூழவுள்ள பகுதிகளில் காணப்பட்ட பற்றைகள் அழிக்கப்பட்டதுடன் குண்டும் குழியுமான பகுதிகள் நிரவப்பட்டு அப்பகுதிகள் சீர் செய்யப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார். அத்துடன் இரண்டாம் கட்டப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவித்த அவர் முத்தவெளிப் பகுதியில் ஏற்ற இறக்கமான பகுதிகளில் புற்றரைகள் அமைக்கப்பட்டு மின்சார வசதியும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு மாநகர சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை என்பன நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேபோன்று கோட்டைக்கும் கடற்கரைக்கும் இடைப்பட்ட கடற்கரைப் பகுதியிலும் புற்றரைகள் அமைக்கப்பட்டு இருக்கைகள் அமைக்கப்பட்டு தூய கடற்காற்றை மக்கள் சுவாசிக்கவும் ஓய்வு எடுக்கவும் ஒழுங்குசெய்ய திட்டமிடப்பட்டிருப்பதாகவும் இதற்காக இந்தக் கடற்கரைப் பகுதியில் மண்போட்டு நிரவப்பட்டு அகலமான பகுதியாக மாற்றப்பட்டுவருகிறது. (பா)

# பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை பிரதேச செயலக விதாதா வள நிலையத்தினால் 2012 ஆம் ஆண்டிற்கான கணினிப் பயிற்சி நெறிகள் ஆரம்பமாக உள்ளது. வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் வசிக்கும் பயிற்சிபெற ஆர்வமுள்ள இளைஞர் யுவதிகள் விதாதா வள நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# வெளிவந்தது பெறுபேறு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் கலைமுதற்தேர்வு - 2009 (வெளிவாரி) பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. மாணவர்கள் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் தமது பெறுபேறுகளை யாழ். பல்கலைக்கழகத்தில் அறிந்து கொள்ளலாம. அத்துடன் மீள் பரீட்சார்த்திகள் மீள் பரீட்சைக்கு உடனடியாகவே விண்ணப்பிக்க முடியும் என்றும் யாழ். பல்கலைக் கழகத்தின் வெளிவாரிப் பரீட்சைப் பிரிவு அறிவித்துள்ளது.

# கண்முன்னே தெரியும் டெங்கு அபாயம்



(மல்லாவி)

மல்லாவி நகர்ப் பகுதியில் இயங்கி வரும் சைக்கிள் திருத்தும் கடைகளுக்கு முன்பாக பழைய ரயர்கள் குவிந்து காணப்படுவதால் டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் தோன்றியுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இப்பகுதியில் சைக்கிள் கடைகளை வைத்திருப்போரில் சிலர் பழைய ரயர்களை நகர்ப்பகுதியில் குவித்து வருவதால் சுகாதாரத்திற்குப் பங்கம் ஏற்படுவதுடன் மழை நீர் தேங்கி நிற்பதால் நுளம்பு பெருகும் வாய்ப்புக்கள் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலமாக சுகாதாரத் திணைக்களம் மக்களின் சுகாதார விழிப்பினை ஏற்படுத்திவருகின்றன. எனவே டெங்கு நுளம்பு பெருகுவதைத் தவிர்க்கும் வகையில் உரியவர்கள் சிந்தித்துச் செயற்படுமாறு பிரதேசவாசிகள் கேட்டுக்கொள்கின்றனர்.

# சமய பாடத்திட்டம் மீளாய்வு

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் கற்பிக்கப்பட்டுவரும் சைவநெறி, இந்து சமயம், இந்துநாகரிகம் முதலான பாடங்களிற்குரிய பாடத்திட்டங்கள் மீளாய்வு செய்யப்படவுள்ளதாகத் தேசிய கல்வி நிறுவக இந்துசமய பாட செயற்திட்ட அதிகாரி பொ.ஜெயரூபன் அறிவித்துள்ளார்.

பாடசாலைக் கல்வியில் 2013 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரவுள்ள புதிய கல்விச் சீர்திருத்தச் செயற்பாடுகளைக் கருத்தில் கொண்டு, தரம் 1 - 13 வரையான வகுப்புக்களிற்குரிய பாடத்திட்டங்களே மீளாய்வு செய்யப்படவுள்ளன.

இந்த மீளாய்வுச் செயற்திட்டம், தரம் 1 - 5, தரம் 6-11, தரம 12,13 வகுப்புகளிற்குரிய பாடத்திட்டத்திலும் மேற்படி பிரிவுகளிற்குரிய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டல்களிலும் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்தச் செயற்திட்ட மீளாய்வுப் பணி இவ்வருடம் முதல் மேற்கொள்ளபபடவுள்ளன.

இந்த மீளாய்வுச் செயற்திட்டம் தொடர்பான கலந்துரையாடல், நாளை சனிக்கிழமை கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணி வரையும் இடம்பெறவுள்ளது.(06)

# சிறுவர்களுக்கு விமோசனம் தாய்மாருக்கு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

பொலநறுவையில் இருந்து யாழ். பஸ்நிலையத்திற்குப் பிச்சை எடுக்க வந்த 3 சிறுவர்களையும் 2 தாய்மாரையும் யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி கடுமையாக எச்சரித்து விடுதலை செய்தார். யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவும் யாழ். பிரதேச செயலக நன்னடத்தை உத்தியோகத்தர்களினாலும் நேற்றுக் காலை 10.00 மணியளவில் இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு யாழ். பொலிஸ் நிலைய சிறுவர், பெண்கள் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்தனர்.

சிறுவர், பெண்கள் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரியினால் நேற்று யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதியிடம் முன்னிலைப்படுத்தப்பட்டபோது நீதவான் 3 சிறுவர்களைப் பாடசாலையில் அனுமதிக்குமாறு உத்தரவிட்டதுடன், தாய்மார் இருவருக்கும் கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். (எஸ்)

# ஆசிரியர் இடமாற்ற சபை திங்கட்கிழமை கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

கடந்தவருடம் ஆசிரியர் இடமாற்றத்திற்காக ஆசியரியர்கள் விண்ணப்பித்ததற்கமைய கடந்த வாரம் ஆசிரியர் இடமாற்றங்கள் இருவருக்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும் கடந்தவருடம் மேன்முறையீட்டுச் சபை வடமாகாணத் திணைக்களத்தினால் கூட்டப்படவில்லை. இதனை காலக்கிரமத்தில் கூட்டுமாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

ஆகவே இடமாற்றச் சபையானது வடமாகாணத் திணைக்களத்தினால் எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை வடமாகாணத் திணைக்களத்தில் கூட்டப்படவுள்ளதாக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். எனவே இடமாற்ற மேன்முறையீட்டிற்கு விண்ணப்பித்த ஆசிரியர்கள் தத்தமது பிரதேச இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் அல்லது செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (12)

# நகர்ப் பகுதியில் குளங்கள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரப் பகுதியில் உள்ள 48 குளங்களில் 32 குளங்களே முழுமையான குளங்களாக இருப்பதாகவும் ஏனைய குளங்கள் தூர்ந்து மூடுண்டிருப்பதாக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். மாநகர சபையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார். இவ்வாறு யாழ். மாநகரசபை பகுதியில் தூர்ந்து மூடுண்டு போயிருக்கும் குளங்களை மீண்டும் தோண்டி புனரமைப்பதற்கு மாநகர சபை நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன் மூலமாக யாழ். மாநகரப் பகுதியில் உள்ள நிலத்தடி நீரினைப் பாதுகாத்து மக்களுக்குச் சிறந்த குடிநீர்கிடைக்க வழியேற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இருந்தும் இவ்வாறான குளங்களைப் புனரமைப்புச் செய்யும் நடவடிக்கையின் போது சில சிக்கல்களையும் தாம் எதிர்நோக்க வேண்டி இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதாவது குளத்தின் சூழவுள்ள பகுதிகள் தனியாரிற்கு விற்பனை செய்யப்பட்டிருப்பது, புனரமைப்புப் பணிகளின்போது போக்குவரத்துப் பாதை ஒரு பிரச்சினையாகவுள்ளது. அத்துடன் சில குளங்களின் பகுதிகளுக்கு சிலர் உரிமை கொண்டாடுவதும் முக்கியமான பிரச்சினையாக உருவெடுத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். இவ்வாறு கண்ணாதிட்டிக்குளம் துப்பரவு செய்ய முடியாதுள்ளது. புல்லுக்குளம் புனரமைக்கப்பட்டு வருகின்றது. ஆரியகுளம், நகரக்குளம், தேவரிக்குளம் என்பன விரைவில் புனரமைக்கப்படவுள்ளது எனவும் யாழ். மாநகர முதல்வர் தெரிவித்தார். (பா)


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித் தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கபபுளியடி, யாழ்ப்பாணம். Tel:- 021 222 8680, 0775925088 (C/1326)

## சிறுநீரகம் அவசரமாகத் தேவை

**சுவிற்ஸர்லாந்தில் வசிக்கும் 45 வயது ஆண் ஒருவருக்கு 'O' NEGATIVE GROUP சிறுநீரகம் அவசரமாகத் தேவைப்படுகின்றது. சிறுநீரகம் வழங்குபவரை சுவிற்ஸர்லாந்துக்கு அழைத்துச் செல்வதற்கும் அங்கு அவர் வாழ்வதற்கான எல்லா வசதிகளும் செய்து தரப்படும்.**

**தகுந்த சன்மானமும் வழங்கப்படும்**

தொடர்பு - **0779224568** (C/1336)


# சாவகச்சேரியில் மருத்துவ முகாம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நாளை காலை 8.00 மணி முதல் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் இலவச வைத்திய முகாம் ஒன்று நடத்தப்படவுள்ளது. இதில் கண் பரிசோதனையும் கண்ணாடி வழங்குதலும், நீரிழிவுப் பரிசோதனை, பொது மருத்துவப் பரிசோதனையும் இடம்பெறும் என சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் கே.பிரதீபன் தெரிவித்துள்ளார். (11)

# கண்டிய நடனம்

(சாவகச்சேரி)

திருமறைக் கலாமன்ற கலைத தூது அழகியல் கல்லூரியில் ஒருவருடகால கற்கை நெறியில் பயிற்சிபெற்ற இளையோரின் கண்டிய நடனம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு தென்மராட்சிக் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கான அனுசரணையை அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகராலயம் வழங்கியுள்ளதாகத் திருமறைக் கலாமன்றத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (11)

# இராமாயணம் காட்சியரங்கு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சரசாலை பொது நூலகத்தினால் பிரதி சனிக்கிழமை தோறும் இராமாயணக் காட்சியும் மகாபாரதக் காட்சியும் காட்சிப்படுத்தப்படவுள்ளது. இதன் ஆரம்ப நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு மேற்படி நூலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளதால் மாணவர்கள் இதில் கலந்து கொள்ளுமாறு நூலகர் இ.தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (11)

நாம் ஒருவருக்கொருவர் ஒரு ரூபாய் கொடுத்தால்,
நம் இருவரிடமும் ஒரு ரூபாய் தான் இருக்கும்.
நாம் ஒருவருக்கொருவர் ஒரு நல்ல எண்ணத்தை பகிர்ந்தால்,
நம் இருவரிடமும் இரு நல்ல எண்ணங்கள் இருக்கும்

- ஆப்ரகாம் லிங்கன்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## அமெரிக்க வெற்றி, நமக்குப் பின்னடைவு!

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 19வது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவால் முன்வைக்கப்பட்ட பிரேரணை நேற்று விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இந்தியா உள்ளிட்ட 24 நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கையில் நல்லிணக்க மேம்பாடும் பொறுப்புக் கூறுதலும் குறித்து அமெரிக்கா கொண்டுவந்த இப்பிரேரணையினை 24 நாடுகள் ஆதரித்தும், 15 நாடுகள் எதிர்த்தும் வாக்களித்துள்ளன. இவ்வாக்கெடுப்பில் 8 நாடுகள் கலந்து கொள்ளவில்லை. இத்தீர்மானத்துக்கு எதிராக சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், கியூபா, தாய்லாந்து மற்றும் மாலைதீவு போன்ற நாடுகள் வாக்களித்துள்ளன.

இந்தப் பிரேரணையினைக் கௌரவப் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு, இதைத் தோற்கடிப்பதற்காகத் தீவிர முயற்சிகளை மேற்கொண்டது என்ற வகையில் இலங்கை அரசுக்கு இது தோல்வியாக அமைந்திருக்கலாம். ஆனால் உள்நாட்டின் பெரும்பான்மை மக்கள் மத்தியில், ஆட்சிக்கான பலத்தை மேலும் உறுதிப்படுத்திக் கொள்ளும் விதமாகவே இந்த விவகாரத்தையும் வெற்றிகரமாக அது பயன்படுத்திக் கொண்டது என்பதே உண்மை.

அமெரிக்காவின் வெற்றியைக் கொண்டாடும் அளவுக்கு நமக்கான அரசியல் தொலைநோக்கைத் தொலைத்துவிட்டவர்களாக தமிழ்த் தரப்புதான் மீண்டும் தவறிழைத்து விட்டிருக்கிறது. குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் புலம்பெயர் தீவிரத் தேசியர்களும் தமிழ் மக்களின் எதிர்காலத்தை மீண்டுமொரு முறை பிழையான பாதைக்குள் தள்ளிவிட்டிருக்கிறார்கள்.

இந்த நாட்டுக்குள் ஒரு தீர்வு கண்டு நாம் வாழ வேண்டுமானால், சிங்கள மக்களில் ஒரு பகுதியினரையாவது நமது நியாயத்தின் பக்கம் திருப்பாமல், அது சாத்தியப்படப் போவதில்லை என்ற உண்மையை பழிவாங்கல், வெறுப்பு ஆவேசத்திற்குள் மறைத்து தமிழ்மக்களை ஏமாற்றி வருகிறார்கள் இவர்கள்.

அமெரிக்காவினால் இலங்கை தோற்கடிக்கப்பட்டதாகக் காட்டப்படுவதானது, சிங்கள தேசிய ஐக்கியத்தை மேலும் வலுப்படுத்தவே காரணமாகும் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். தேசிய ஐக்கியம் என்பது இனவாதமாகவும் மாற்று இன வெறுப்பாகவுமே வளர்ச்சியடையும் என்பதை நமது தமிழ்த் தேசிய வளர்ச்சி அனுபவத்திலிருந்து அறிவோம். மாற்று இனங்களின் மீதான நமக்கிருக்கும் வெறுப்பை நாம் ஒவ்வொருவரும் ஒருமுறை சுயவிமர்சனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அமெரிக்க வெற்றி தமிழ் மக்களின் வெற்றி என்று காட்ட முற்படுவோமானால், சிங்கள மக்களை மீண்டும் மீண்டும் பகை நிலைக்குத் தள்ளும் முயற்சியையே நாம் செய்து கொண்டிருக்கிறோம் என்பதே பொருள். ஒட்டுமொத்த சிங்கள சமூகத்தையே பகைநிலைக்குத் தள்ளி வைத்துக்கொண்டு, இந்த நாட்டில் நமக்கான தீர்வைப் பெற வேறு ஏதோ வகையில் மாயவழி ஒன்று இருப்பதாக நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிறோம்.

மாயவழிகள், குறுக்குவழிகள் என்று ஆதாரமெதுவுமற்ற நம்பிக்கைகளைத் தொடர்ந்து தந்து கொண்டிருப்போர் குறித்து தமிழ் மக்கள் விழிப்படைய வேண்டும். உணர்ச்சிகர ஆவேசப் பொய்மைகளில் ஏறி நம் மக்கள் பாதுகாப்பான வாழ்வுக்குச் செல்ல முடியாது.

நடைமுறை யதார்த்தம் எதுவென்பதைப் பகுத்துணர்ந்து கொள்வதன் மூலமே பாழடைவுப் பாதையிலிருந்து நாம் தப்பிக்க முடியும்.

– ஆசிரியர்

# பாலியல் வன்முறைகளைத் தடுக்க சமூக ஆலோசனைகள் வேண்டும்

## யாழ்.நீதிமன்ற நீதவான் மா.கணேசராசா

(யாழ்ப்பாணம்)

போருக்குப்பின்னர் குறிப்பாக சிறுபிள்ளைகள் தாய், தந்தை அற்று அநாதரவாக உள்ளபோது அவர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாக உள்ளது.

பல அநாதரவான பிள்ளைகள் நிர்க்கதியான நிலையில் சிறுவர் இல்லங்களிலும் தாய் தந்தை தவிர்ந்த ஏனைய இடங்களில் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் பாலியல் வன்முறைகளில் பாதிககப்பட்டவர்களுக்கு உதவுவதற்கென உருவாக்கப்பட்ட பாதிக்கப்பட்ட பெண்கள் பாதுகாப்பு அமைப்புக்கள் மற்றும் சட்ட உதவி ஆணைக்குழு ஆகியவை கூடுதல் கவனத்துடனும் செயற்படுதல் அவசியம்.

பாலியல் வன்முறைகள் ஆரம்பிக்க முன்னர் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்பது முக்கியமானதாகும். பாலியல் கல்வி பாடசாலை ஆலோசனைக் கூட்டங்கள், பாடசாலை சுகாதார சேவைகள் ஆகியவை இவ்வாறான வன்முறைச் செயல்களில் ஈடுபடுவது தவறானதெனப் புகட்ட வேண்டும்.

மற்றும் எமது சமுதாயத்தைப் பொறுத்தவரையில் சட்டரீதியான நடவடிக்கைகளை பாலியல் வன்முறைக்கு எதிராக எடுப்பதற்கு தயக்கம் காட்டுகின்றனர். எமது கலாசார நடைமுறைகள் காரணமாக இவ்வாறான ஒரு நிலையில் வன்முறைகளை வெளிக்கொணர்வதற்கு ஊடகங்களின் பங்களிப்பு மிக முக்கியமானது. சட்டரீதியான உரிமைகள் பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்கும் பாலியல் வன்முறைகளை கருத்தில் எடுத்து நடவடிக்கை எடுப்பதற்கும் ஊடகம் தான் முக்கிய கால்வாய் ஆகும்.

சிறுமிகள் மீது சுமத்தப்படும் பாலியல் வன்முறைகளுக்கு 10 இல் இருந்து 20 வருடங்களுக்கு சிறைத்தண்டனை வழங்க சட்டத்தில் இடமுண்டு. இவ்வாறான வன்முறைகளுக்கு ஆயுள் தண்டனை வழங்கும் சட்டங்களை உருவாக்கவும் நடாளுமன்றத்தில் வன்முறைகளுக்கு எதிராக சட்டங்களை கொண்டு வரவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும் ஐ.நா.சிறுவர் நிதியம் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளைப் பாதுகாப்பதற்காக சட்டங்கள் இயற்றப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளன.

யாழ்ப்பாணத்தில் இலங்கையில் இரண்டாவது சிறுவர் நீதிமன்றம் உருவாக்கப்பட்டிருப்பதும், சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான ஒரு பொறிமுறையாக இருக்கிறது. பாதிக்கப்பட்டவர்கள் வசதி குறைந்தவர்களாகவும், குற்றம் புரிந்தவர்கள் வசதி படைத்தவர்களாகவும் இருப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. இவ்வாறான நிலையில் இத்தகைய குற்றச்செயல்களை வெளிப்படுத்துவதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவவும் ஊடகங்களும் பெண்கள் தொடர்பான அமைப்புக்களும் சிறந்த பங்களிப்பைச் செய்ய வேண்டும்

எமது சமுதாயத்தில் பெண்கள் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு உள்ளடக்கப்படுவதும மற்றும் மணநீக்கம், குடும்ப பொருளாதாரம் மற்றும் அந்தஸ்து நிலை, மேம்பாடு குறைந்து போதல், குடும்ப வன்முறை தலைவிரித்தாடும் குடும்பங்களில் வளரும் பிள்ளைகளுக்கு எதிராக வன்முறை அதிகரிப்பு ஏற்படும் சாத்தியம் ஆகியன கவனத்தில் கொள்ளப்படவேண்டும். சிறுவர்களை பயமுறுத்தல், சாட்சியங்களை விலைக்கு வாங்கும் முயற்சிகள் தடுக்கப்பட வேண்டியது முக்கியமாகும்.

பாலியல் வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களை இனம் கண்டு உதவுவதற்கு மிகவும் முக்கியமான வழிகளில் ஒன்று சுகாதார சேவையில் ஈடுபடுபவர்களுக்கு பாலியல் வன்முறைகளை நன்கறிந்து செயற்படுத்துவதற்கேற்ற பயிற்சி வழங்குவதாகும். தனியே பிரசவ மருத்துவர்கள், பெண்ணியல் மருத்துவர்கள் மட்டும் அல்லாது பொது மற்றும் தனியார் சுகாதார அலுவல்கள், குடும்பநல மருத்துவர்கள், வளாகப் பயிற்சியாளர்கள், குழந்தை மருத்துவர்கள், மனநோய் மருத்துவர்கள், குடும்பநல நிதியங்களின் தாதியர்கள், சக ஊழியர்கள் போன்ற சகல சுகாதார சேவையில் ஈடுபடுபவர்களும் அறிகுறிகளைக் கண்டறியக் கற்றுக்கொள்ள வேண்டும். (எஸ்)

## ஆலய பொதுக்கூட்டத்தை நடத்துமாறு கோரிக்கை

(வவுனியா)

வவுனியாவிலுள்ள பழமைமிக்க ஆலயங்களில் ஒன்றான குடியிருப்பு சித்திவிநாயகர் ஆலயத்தின் விசேட பொதுக்கூட்டத்தினை வவுனியா பிரதேச செயலாளரின் பிரசன்னத்துடன் கூட்ட வேண்டுமென ஆலயத்தின் அடியவர்கள் 71 பேர் கையொப்பம் இட்டு பிரதேச செயலாளருக்கு மகஜரொன்றை கையளித்துள்ளனர்.

இவ்வாலயத்தில் இடம்பெறும் பல்வேறான சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பிலும் ஆலயத்தின் வளர்ச்சி நிலை குறித்தும் கேள்வியெழுப்பப்பட்டுள்ள இம் மகஜரில் பிரதேச செயலாளரின் பிரசன்னத்துடன் விசேட பொதுக்கூட்டமொன்று கூட்டப்பட வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் பிரதேச செயலகத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பிரதேச செயலக அதிகாரியொருவர் தெரிவித்தார்

## வாகனவிபத்து இளைஞர் காயம்

(புதுக்குடியிருப்பு)

பரந்தன் சந்தியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 8.10. மணியளவில் இடம்பெற்றுள்ளது. ஏ-9 வீதியால் வந்த மேற்படி வாகனம் முல்லைத்தீவு சாலையில் செல்வதற்கு திரும்பியபோது மரக்கறிக் கூடையில் மரக்கறி கொண்டு வந்த இளைஞருடன் மோதியதில் மரக்கறிகள் வீதியில் சிதறுண்ட நிலையில் அவ்இளைரும் சிறிது காயத்துக்குள்ளானதாக அறியமுடிகிறது.

சம்பவம் நடந்ததும், அவ்விடத்திற்குக்கு கூடிய பொதுமக்கள் மரக்கறிகளை எடுத்துக்கொடுத்துள்ளதோடு அங்கு சாலைக் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த பொலிஸாரும் ஸ்தலத்திற்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். (138)

## சேவை நலன். பாராட்டு

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்வி வலய அதிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் வடமராட்சி கல்வி வலயத்தில் சேவையாற்றி பதவி உயர்வு பெற்ற அதிகாரிகளுக்கான சேவை நலன்பாராட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 11 மணிக்கு வடமராட்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தற்போது யாழ்.கல்விப் பணிப்பாளராக சேவையாற்றிவரும் வ.செல்வராசா மேலதிக மாகாணகல்வி அமைச்சின் உதவிப் பணிப்பாளர் செ.உதயகுமார், யாழ்.கல்வி வலய கணக்காளர் எஸ்.கிரிதரன் ஆகியோருக்கே பாராட்டு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

---

வடமராட்சி மக்களும், வடமராட்சி பொது அமைப்புக்களும் இணைந்து வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலராக கடமையாற்றி வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளராக பதவியுயர்வு பெற்ற எஸ்.சத்தியசீலன் அவர்களுக்கான பணிநயப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது. நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர்.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை நெல்லியடி முருகன் கோயில் ஆலய குருக்கள், கரவெட்டி பங்குத்தந்தை ஆகியோர் வழங்கவுள்ளனர்.

வாழ்த்துரைகளை யாழ்.அரசஅதிபர் திருமதி இமெல்டா சுகுமார், வடமாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், முன்னார் வடமாகாண பிரதம செயலளார் ஆர்.சிவசுவாமி ஆகியோர் வழங்கவுள்ளனர். (109)

## கோம்பயன் மணல் மயானம் 20 மில்லியன் ரூபாவில் புனரமைப்பு

யாழ்.கோம்பயன் மணல் மயானம் 20 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளதாக யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

இதற்கான நிதியினை வடமாகாண சபை நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாக புனரமைப்பு இன்றியுள்ள இந்த மயானத்தின் பகுதிகள் இந்த நிதியினைக் கொண்டு புனரைமக்கப்படவுள்ளதுடன் சடலங்களை பாரம்பரிய முறையில் எரியூட்டவும் மின் சாரம் மூலம் தகனம் செய்யவும் வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளதாகவும் யாழ்.மாநகர முதல்வர் மேலும் தெரிவித்தார்.

நேற்று யாழ்.மாநகரசபையின் அலுவலகத்தில் அவர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்.


# மணல் அகழ்வு நடவடிக்கை; கிளிநொச்சியில் உயர்மட்ட ஆராய்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு தேவைகளுக்கும் மணல் அகழ்வது தொடர்பாகக் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கடந்த 19 ஆம் திகதி ஈ.பி.டி.பி.நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தலைமையில் இக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

சட்ட விரோதமான மண் அகழ்வு தொடர்பாக பொலிஸார் எடுத்துவரும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் மணல் அகழ்விற்குப் பொறுப்பாகச் செயற்படும் பொது அமைப்புக்களின் செயற்பாடுகள் தொடர்பாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் விரிவாக ஆராய்ந்தார். அத்தோடு குறித்த செயற்பாட்டின் மூலம் கிராம மட்ட அமைப்புக்கள் பெற்றுக் கொண்ட வருமானத்தை மக்கள் நலன்சார்ந்த செயற்பாடுகளுக்குப் பயன்படுத்த வேண்டுமெனவும் பொதுவான கொள்கைத் திட்டத்திற்கமைவாக நடைமுறையிலுள்ள சட்ட வரைமுறைகளுக்கமைவாக அவற்றைப் பயன்படுத்த வேண்டுமெனவும் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு ஆலோசனை வழங்கினார்.



இக்கலந்துரையாடலின் முடிவில் தேசத்தின் எதிர்காலத்தினைக் கருத்திற்கொண்டு இயற்கை வளங்களையும் நில வளத்தினையும் பாதிக்காத வகையில் அகழப்படும் மண்ணின் பயனை இப்பகுதி மக்கள் முழுமையாகக் கிடைக்கக்கூடிய வகையிலும் செயற்பாடுகள் அமையவேண்டுமெனவும் அதற்கான செயற்பாடுகளில் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் அதிக அக்கறையுடன் செயற்பட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்தோடு குறைந்த செல[illegible]வில் இவ்வளத்தினை மக்கள் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவும் வியாபார நோக்கங்களுக்கு அப்பாற்பட்ட செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டுமெனவும் முடிவெடுக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர்களும் கனியவளத திணைக் களத்தினரும், கிராம சேவையாளர்கள், கிராமமட்ட அமைப்புக்கள் எனப் பலரும் கலந்து கொணடனர்.

## செயன்முறை போட்டி

(யாழ்ப்பாணம்)

உடுவில் கோட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்று வரும் கோட்டமட்ட தமிழ்த் தினப்போட்டியில் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நாடகம், விவாதம் (திறந்தபோட்டி) தனி இசை, தனி நடனம் பிரிவு II, III, IV, V ஆகிய போட்டிகள் இணுவில் மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பேச்சு, பாவோதல் பிரிவு II, III, IV, V ஆகியன கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயத்திலும், ஏப்ரல் மாதம் முதலாம் திகதி பிற்பகல் 8 மணிக்கு குழு இசை - I, II, குழு நடனம்- I ஆகியன இணுவில் இந்துக் கல்லூரியிலும் இடம்பெறவுள்ளது. (44)

## பூசை வழிபாடுகள் ஆரம்பம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு - 4ஆம் வட்டாரத்தில் உள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலின் புனருத்தாரண வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. யுத்தத்தின் போது மிகவும் சேதமடைந்த இந்த ஆலயம் மக்கள் மீள்குடியேறிய பின்பு கடந்த ஞாயிற்றுக் கிழமை பாலஸ்தானம் செய்யப்பட்டு பூசை வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, ஆலய மண்டபத்தினுள் வெளியார் எவரும் வந்து இரவில் தங்கி நிற்பதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாகவும் தடையை மீறிச் செயற்படுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்துள்ளனர். (138)

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

இணுவையம்பதி சிவகாமி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் இடம்பெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 3ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 4ஆம் திகதி இரதோற்சவமும், 5ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

# ஆசிரிய ஆலோசகர்களுக்கு கொடுப்பனவுகள் அதிகரிப்பு

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களுக்குரிய பாடசாலைத் தரிசிப்புக்கான மாதாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு ரூபா 1500 இலிருந்து ரூபா 3000 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் நியமனம் தொடர்பில் வடமாகாண ஆளுநருடன் இடம் பெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர்களின் கலந்துரையாடலின் போது இந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு பற்றி பல மாதங்களுக்கு முன்னர் ஆளுநரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் இதுவரை இக் கொடுப்பனவு வழங்கப்பட்டிருக்காத நிலையில் ஆசிரிய ஆலோசகர்களின் கோரிக்கைக்கு ஏற்ப ஜனவரி, பெப்ரவரி மாதக் கொடுப்பனவும் இம்மாதக் கொடுப்பனவுடன் சேர்த்து வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.(06)

# மகாகும்பாபிஷேகமும் பொங்கல் வழிபாடும்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு-கோம்பாவில் பகுதியில் 2 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலய மகாகும்பாபிஷேகமும் வருடாந்தப் பொங்கல் விழாவும் நடைபெறவுள்ளது. மகாகும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.28 -10.32 மணிவரையுள்ள சுப வேளையில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளதுடன் தொடர்ந்து 11 தினங்கள் மண்டலாபிஷேகமும் இடம்பெறும். பொங்கல் விழா எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி மதியம் 12 மணிக்கு அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி இரைவு பட்டுச் சார்த்தல், பண்டம் எடுத்தல், கச்சை நேர்தல், தூளி பிடித்தல், அணியம் நேர்தல், வளந்துவைத்தல் ஆகிய நிகழ்வுகளுடன் பொங்கல் வழிபாடுகள் இடம்பெற்று அதிகாலை 6.30 மணிக்கு பரிகலம் வழிவிடுதலுடன் நிறைவு பெறவுள்ளது. (138)

# மதிய உணவு வேலைத்திட்ட விபரங்களைச் சமர்ப்பிக்கவும்

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் மதிய உணவு வேலைத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள சமையல் அறைகள், களஞ்சிய அறைகள் தொடர்பான விபரங்கள் வடமாகாணக் கல்விப் பணிப்பாளரால் கோரபட்டுள்ளது.

இதன்படி திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டிய சமையலறைகள் பற்றிய விபரங்களையும் புதிதாக அமைக்கப்பட வேண்டியுள்ள களஞ்சிய அறைகள் பற்றிய வ்பரங்களுமே கோரப்பட்டுள்ளன.

சமையலறைத் திருத்தம் மேற்கொள்ள வேண்டியுள்ள பாடசாலைகளும், புதிய களஞ்சிய அறை அமைக்க வேண்டியுள்ள பாடசாலைகளும் தங்கள் விபரங்களை அதற்குரிய படிவங்களை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஊடாக வலயக் கல்விப் பணிமனைக்கு அனுப்பி வைக்கும்படி அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

இதற்கான படிவங்களைக் கோட்டக் கல்விப் பணிமனைகளில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (06)

# கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் கலைஞர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)


கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் யாழ்.மாவட்டத்திலுள்ள கலைஞர்களில் 13 பேர் ஊக்குவிப்புக் கொடுப்பனவுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.


இவர்களுடைய கலையை ஊக்குவிக்கும் வகையில் ஊக்குவிப்புத் தொகையாக தலா 3 ஆயிரத்து 500 ரூபா வழங்க மேற்படி திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. கொடுப்பனவைப் பெறும் கலைஞர்களின் விபரம் வருமாறு,


கந்தன் சின்னப்பொடியன் (நாட்டுக்கூத்து) சின்னையா செகராஜசிங்கம் - (இலக்கியம்), ஆறுமுகம் தெய்வேந்திரம் - (நாடகம்), சண்முகம் பொன்னன் - (நாட்டுக்கூத்து, ஓவியம்), சீனியன் குமரகுரு - (நாடகம், இசை), அமரசிங்கம் இராசதுரை - (இலக்கியம்), கந்தையா இராசநாயகம் - (இசை), நல்லான் தங்கவேலு - (நாடகம்), கிறிஸ்தோபர் மக்சிமஸ் - (நாடகம், நாட்டுக்கூத்து), சிங்கராயர் செபமாலை - (நாடகம்), பாவிலுப்பிள்ளை வேதநாயகம் - (இலக்கியம், நாடகம்), கதிர்காமு செல்வராசா - (நாட்டுக்கூத்து), வீரகத்தியார் காசிநாதர் - (நாட்டுக்கூத்து). (எஸ்)

## ஆன்மீகச் சொற்பொழிவு

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவக் கலைபண்பாட்டுப் பேரவையால் நடாத்தப்படும் ஆன்மீக நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் 'தேவிபாகவதம்' என்னும் விடயம் பற்றி சொறபொழிவாற்றவுள்ளார். (116)







காரைநகர் மணற்காடு அருள்மிகு தேவி ஸ்ரீ கும்பநாயகி முத்துமாரி அம்மன் ஆலயத் தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அம்பாள் தேரில் ஆரோகணிப்பதற்காக எழுந்தருளி வருவதையும், சித்திரத் தேரில் அமர்ந்து கொண்டு பக்தர்களுக்கு அருள்பாலிப்பதையும், அடியார்கள் அங்கப் பிரதட்சணம் செய்வதையும் காணலாம். (50)

# மாதர் கைப்பணிப் பயிற்சி நிலையம் அல்வாயில் நிறுவுவதற்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி அல்வாய் கிராமத்தில் மாதர்களுக்கான கைப்பணிப் பயிற்சி நிலையம் ஒன்றை நிறுவவும் அதற்கென போதனாசிரியை ஒருவரை நியமிக்கவும் பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் பசுபதி சீவரட்ணம் ஏற்பாடு செய்துள்ளார்.

வட அத்வை இளங்கோ பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்ற கிராமியப் பெண்கள மற்றும் கிராமப் பிரமுகர்களுடனான விசேட சந்திப்பின் போது அல்வாய் கிராமத்தவர்கள் விடுத்த கோரிக்கையினை ஏற்ற பனை அபிவிருத்திச சபைத்தலைவர் பசுபதி சீவரட்ணம் பனை வளத்தின் பயன்பாடுகளையும் அதனூடாக கிராமியப் பெண்கள் தமது வாழ்வாதாரத்தை எவ்வாறு தூக்கி நிறுத்தலாம் என்ற கருத்து ரைகளையும் வழங்கினார்.

அத்தோடு அல்வாயில் பனை வள கைப்பணிப் பயிற்சி நிலையம் ஒன்றை நிறுவி அதன் உற்பத்திப் பொருட்களைப் பனை அபிவிருத்திச் சபை கொள்வனவு செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும் என்றும் அதனூடாக பெறப்படுகின்ற வருமானம் கிராமியப் பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வழி சமைக்கும் என்றும் பனை அபிவிருத்திச்சபைத்தலைவர் பசுபதி சீவரட்ணம் நம்பிக்கை தெரிவித்திருந்தார். இதையடுத்து உட னடியாகவே 25 பெண்கள் தமது பெயர்களை பயிற்சி நெறிக்காக பதிவு செய்து கொணடதோடு மேலதிக பெண்களை இதில் இணைக்கும் முயற்சியும் நடைபெற்று வருகின்றது.

இப்பயிற்சி நெறியை துரிதமாக முன்னெடுப்பதற்காக முதற்கட்டமாக 5 பேர் கொண்ட நிர்வாகக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை இளங்கோ மழலைகள் கல்வி நிலையத்தினர் விடுத்த வேண்டுகோளை ஏற்று அதன் ஆசிரியைகள் இருவருக்கும் பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தினூடாக மாதாந்தக் கொடுப்பனவு வழங்கவும் பனை அபிவிருத்திச் சபைத்தலைவர் பசுபதி சீவரட்ணம் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்பின் போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் சர்வதேச பிராந்தியங்களின் முக்கியஸ்தர் விந்தன், கட்சியின் வடமராட்சி அமைப்பாளரும் பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

# கவனிப்பாரற்ற நிலையில் நீர்ப்பாசனத் திணைக்கள விடுதி



(மல்லாவி)

முல்லை மாவட்ட துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட ஐயன்கன்குளம் கிராமத்தில் அமைந்த வன்னேரிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான ஊழியர் தங்கும் விடுதி திருத்த வேலைகள் செய்யவில்லையென ஊழியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த யுத்த அனர்த்தத்தினால் இவ் விடுதிக்கட்டடம் முற்றாக சேதத்திற்குள்ளானது. எனினும் இப்பிரதேசத்தில் மக்கள் மீள் குடியமர்ந்து 3 வருடங்களை கடந்து விட்ட நிலையில் இவ் அரச கட்டடம போரின் வடுக்களைச் சுமந்து உருக்குலைந்த நிலையில் காட்சியளிக்கின்றது.

இதனைப் புனரமைத்து நீர்ப்பாசன ஊழியர்களுக்கு வழங்க இதுவரை எவரும் முன்வரவில்லை எனவும் இதனால் பிற மாவட்டங்களில் இருந்து கடமைக்கு வரும் ஊழியர்கள் தங்கும் விடுதி இன்மையால், தாம் பெரும் அவலப்படுவதாக தெரிவிக்கின்றனர். (143)

# நாட்டுக் கூத்துப் போட்டி

(வலிகாமம்)

தமிழ் மொழித்தின விழாவை முன்னிட்டு வலிகாமம் கல்வி வலயப்பாடசாலை மாணவர்களிடையேயான நாட்டுக்கூத்துப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

வடமோடி, தென்மோடி, சிந்துநடைக்கூத்து, விசேடகூத்து, இசைநாடகம் முதலான வகைக் கூத்துக்கள் தொடர்பான போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப்போட்டிக்கு விண்ணப்பித்துள்ள பாடசாலைகள் தங்கள கூத்தணிகளோடு காலை 9 மணிக்கு முன்னர் இராமநாதன் கல்லூரிக்கு வருகை தருவதுடன பதிவுகளை மேற்கொள்ளுமாறும அவர் அறிவித்துள்ளார். (06)

# பாடசாலை மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்பப் போட்டி

(தென்மராட்சி)

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தினால் வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பப் போட்டிகள் நடத்தப்படவுள்ளது.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வினாடி வினாப் போட்டி, இணையத்தள வடிவமைப்புப் போட்டி என இரு பிரிவுகளாக போட்டி நடத்தப்படவுள்ளதுடன் 5 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு நடத்தப்படவுள்ளது.

வினாடி வினாப்போட்டியில் தரம் 1 முதல் 5 வரை பிரிவு ஒன்றிற்கு ஆரம்பப்பிரிவுக்கென வழங்கப்பட்டுள்ள தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் தேர்ச்சிகளில் உள்ளடக்கப்பட்ட பகுதிகளும், தரம் 6 முதல் 9 வரை பிரிவு I இற்கு மேலதிகமாக தகவல்தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான பொது வினாக்களும் புதிய கண்டுபிடிப்புக்கள் அறிமுகம் தொடர்பான வினாக்களும் வழங்கப்படும்.

தரம் 10 முதல் 11 வரையான பிரிவு III இற்கும் பிரிவு II இற்கும் மேலதிகமாக தரம் 10,11, ICT பாடம் தொடர்பான வினாக்களும் தரம் 12-13 வரையான பிரிவு -V இற்கும் பிரிவு II இற்கும் மேலதிகமாக GIT பாடம் சார்ந்த வினாக்களும வழங்கப்படும்.

இணையத்தள வடிவமைப்புப் போட்டி திறந்த போட்டியாக நடைபெறுவதுடன் ஒரு பாடசாலையிலிருந்து எத்தனை போட்டியாளர்களும் பங்கு பற்ற முடியும். வடிவமைக்கப்படும் இணையத்தளங்கள் பாடம் சார்ந்த பொதுவிடயம் சார்ந்ததாக(பாடசாலை,கிராமம்) அமையலாம். இத்தளங்கள் இணைய இலவச இடவசதியை வழங்கும் Blogger, Wordpress, Googlesite போன்றவற்றைப் பயன்படுத்தி அல்லது Schoolnet blog வசதியைப் பயன்படுத்தி வடிவமைக்கப்பட்டு அவற்றின் இணையத்தள முகவரிகள் மதிப்பீட்டிற்காக எதிர்வரும் ஜூன் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் வலயக கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிககப்படவேண்டும் என தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை மாவட்ட சாரண கிளைச் சங்கத்தினால் ஆசிரியர்களுக்கான கலைக் கூற்று பயிற்சிப்பட்டறை நாளை மறுதினம் மானிப்பாய் ஆசிரிய வள நிலையத்தில் நடத்தப்படவுள்ளது.

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளில் சாரணர்களுக்கு பொறுப்பாகவுள்ள ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# புழுதிப்படலம் மேலெழும் மல்லாவி -மாங்குளம் வீதி

(மல்லாவி)

மல்லாவி - மாங்குளம் பிரதான வீதி நீண்டகாலமாக திருத்தப்படாதிருப்பதால் இவ் வீதியூடாக பயணிப்போர் பல்வேறு சிரமங்களுக்குள்ளாவதாகத் தெரிவிக்கின்றனர்.

சுமார் 22 கிலோ மீற்றர் தூரம் கொண்ட இப் பிரதான வீதி எந்தவித புனரமைப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படாத நிலையில் கிரவல் மண் தரையாகவே காணப்படுகின்றது.

இதனால் இவ் வீதியூடாக கனரக வாகனங்கள் செல்லும் போது ஏனைய வாகனங்கள் குறிப்பாக துவிச்சக்கர வண்டிகளில் செல்வோர் கூட பயணிக்கமுடியாத அளவிற்குப் புழுதி மேலெழுந்து புகை மண்டலமாகக் காணப்படுவதாகவும், இவை சுகாதாரத்திற்கும் சீர்கேடு விளைவிப்பதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதை விட இவ் வீதிப்பகுதியில் அனிஞ்சயன் குளம் தமிழ்க் கலவன் வித்தியாலயமும் அமைந்துள்ளதால் புழுதிப்படலம் மாணவர்களுக்கு இடையூறை ஏற்படுத்துவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்தின் பிரதான வீதியாகக் காணப்படும் இவ் வீதியை புனரமைக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (143)

# முரசின் இன்றைய பலன்

(23.03.2012 -வெள்ளிக்கிழமை)

கர வருஷம் பங்குனி மாதம் 10 ஆம் திகதி. பிரதமை முன்னிரவு 10.16 வரை.
நட்சத்திரம் உத்தரட்டாதி பிற்பகல் 12.49 வரை. சித்தாமிர்தம்.
இராகுகாலம் 10.46 - 12.16 வரை. சுபநேரம் 6.16 - 7.46 வரை.
எமகண்டம் 3.16 - 4.46 வரை. குளிகை காலம் 7.46 - 9.16 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பணவரவு, திடீர் சுபகாரியம், இருப்பிட சீரமைப்பு, மனச்சஞ்சலம். |
| ரிஷபம் | வீண்அலைச்சல், செலவுகள், உடல்உபாதைகள், முன்னெச்சரிக்கை நன்று. |
| மிதுனம் | மனத்தெளிவு, கடன்தொல்லை தீரும், வெளியூர் வேலைவாய்ப்பு, பதற்றம் வேண்டாம். |
| கடகம் | மனவிருத்தி, நாணயம் தவறி குழப்பம், சகோதரவழியில் இடைஞ்சல், பொறுப்பேற்பு. |
| சிம்மம் | பயணம் கூடாது, அந்நியர் சகாயம், உறவினர் வருகை, பதவி உயர்வுகள். |
| கன்னி | கூட்டுமுயற்சி, சிறு பயணம், சுபகாரியங்கள், பிரச்சினைகளால் தவிப்பு. |
| துலாம் | வீண் அலைச்சல், நண்பர்கள் விரோதி களாவார், எதிர்பாராத இடமாற்றம், சுபகாரியங்கள். |
| விருச்சிகம் | வாகன சுகம், தர்க்கங்களைத் தவிர்க்கவும், சகோதரர் உதவி, பழைய நண்பர்கள் உதவி. |
| தனுசு | விருந்தோம்பல், சலனப்படல், தூரதேச ப்பயண வாய்ப்பு, கொடுக்கல் வாங்கலில் திருப்தி. |
| மகரம் | ஆத்திரப்படல், மனதில் உற்சாகம், மகிழ்ச்சி, புத்திர வழியில் சுபகாரியம், பெரியோர் ஆதரவு. |
| கும்பம் | செலவு அதிகரிப்பு, குடும்பத்தில்சுபகாரியம், ஆடை ஆபரணம் சேரும், கடன் தொல்லை குறையும். |
| மீனம் | தனஇலாபம், தொழிலில் போட்டி பொறாமை, சண்டை சச்சரவுகள், அதிகாரிகள் தொல்லை. |

# அரச ஊழியர்களின் கடமை நேரம் அறிவிப்பு

(வலிகாமம்)

பாடசாலைகள் தவிர்ந்த அரச திணைக்களங்களில் கடமை புரியும் பதவி நிலை உத்தியோகத்தர், நிர்வாக உத்தியோகத்தர், முகாமைத்துவ உதவியாளர்கள், எழுதுவினைஞர்கள, சிற்றூழியர்கள் முதலானோரின் சட்ட ரீதியான கடமை நேரம் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சுற்று நிருபத்தின்படி அனைத்து நிர்வாக சேவை சார்ந்த அரச ஊழியர்களின் கடமை நேரம் காலை 8.30 முதல் மாலை 4.15 வரை எனவும், சிற்றூழியர்களின் கடமை நேரம் காலை 8.30 மணி முதல் மாலை 4.45 வரையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடமை நேரத்தினை சரியான முறையில் நடைமுறைப்படுத்தும் பொருட்டு கையொப்ப இயந்திரம் வடபகுதியில் உள்ள அரச திணைக்களங்களில் பொருத்தப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (06)

# கொடியேற்றம்

பாணன்குளம் நாச்சியம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்கள் திருவிழா இடம் பெறவுள்ளது. இதில் எதிர் வரும் 6ஆம் திகதி இரதோற்சவம் இடம் பெறும்.

# இடமாற்ற ஆசிரியர்கள் சம்பளத்தைப் பெறவும்

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயத்திலிருந்து வன்னிக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற ஆசிரியர்கள், மார்ச் மாதத்திற்குரிய சம்பளத்தை வலிகாமம் கல்வி வலயத்தில் பெற்றுக்கொள்ளலாம் என வலயக்கல்விப்பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இவ்வலயத்திலிருந்து வன்னிக்கு இடமாற்றம் பெற்றுச்சென்று கடமையேற்றுள்ள ஆசிரியர்களும் இடமாற்றம் பெற்று இதுவரை கடமையேற்காது உள்ள ஆசிரியர்களும் இந்த மாதச் சம்பளத்தினை வலிகாமம் கல்வி வலயத்தில் பெற்றுக்கொள்வதற்கு மாகாண கல்வித்திணைக்களத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் அறிவித்துள்ளார். (06)

# தமிழர்களையே தோற்கடிக்கும் "தமிழ் இராஜதந்திரம்"

- என்.சத்தியமூர்த்தி -

"போர்க்குற்றங்களுக்கான உத்தரவாதம்" குறித்த அமெரிக்காவின் தீர்மானம் வெற்றி பெற்றாலும், தோல்வி அடைந்தாலும், ஏன் - பின்வாங்கப்பட்டாலும், அதன் தாக்கம், இலங்கைவாழ் தமிழ் மக்களையே பாதிக்கும்.

ஜெனிவா வாக்கெடுப்பால் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கும், அவர்கள் சொல்-பேச்சு கேட்டு நடப்பதுபோல் தோன்றும் தமிழ் அரசியல் தலைவர்களுக்கும் எந்தவித பிரச்சினையும் எழாது. முதலாமவர்கள், கண்காணாத தேசங்களில், தங்களது குடும்பத்தினருடன் பாதுகாப்பாக இருந்து இலங்கை தமிழ் அரசியலின் போக்கை தொடர்ந்து வழிநடாத்திவருபவர்கள். பின்னவர்கள், இந்தியாவிலும் இன்ன பிற நாடுகளிலும் இன்னமும் தங்கள் குடும்பங்களை பாதுகாப்பாக தங்கவைத்துவிட்டு, இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு கொம்புசீவி அரசியல் செய்பவர்கள்.

இந்த கவலைகளுக்கு காரணம் இல்லாமல் இல்லை. ஜெனிவா வாக்கெடுப்பில் இலங்கை வெற்றி பெற்றாலும் அல்லது தோல்வியை தழுவினாலும், இலங்கை அரசின் நிலையிலும் பெரும்பான்மை சிங்கள சமூகத்தின் கண்களிலும் அதற்கான "பழிச் சொல்" தமிழினத்தையே வந்தடையும். அப்போது, காரண



காரியங்களுக்கும், நியாய - அநியாயங்களுக்கும் இடம் இருக்காது. இது ஏதோ எதிர்கால குற்றங்களை தற்காலத்திலேயே நியாயப்படுத்துவது போலக் கூட தோன்றலாம். ஆனால், இனப் பிரச்சினையின் சரித்திரம் புகட்டும் பாடம் இதுதான்.

அதுமட்டுமல்ல, ஒருகட்டத்திற்கு மேல், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தமிழர் - ஆதரவு அரசியலும் வன்முறையும் கூட, தனக்கு என்று ஏதோ ஒரு நியாயத்தை கற்பித்துக் கொண்டது. அதற்கு என்று ஒரு தர்மத்தையும் தமிழ் மக்களுக்கு போதித்தது. இவற்றை மட்டுமே நிலைநிறுத்துவதற்கும் அப்பால் சென்று, தனக்கு என்று ஓர் உத்வேகத்தையும் செயற்பாட்டையும் போகிற வழியில் அது பெற்றுக்கொண்டது. தானே நிர்மாணித்த இந்த "சக்கரவியூக"த்தில் மாட்டிக் கொண்ட விடுதலைபுலிகள் இயக்கத்தால் அதில் இருந்து வெளியே வரமுடியவில்லை என்பதே உண்மை.

இதனால் பாழ்பட்டது இலங்கைவாழ் தமிழர் வாழ்வும் அவர்களது உயிரும், உடமையும்தான். இதன் காரணமாக இன்றளவும் அல்லல்படுவதும் அவர்கள்தான். அலை ஓய்ந்தாலும் மழை ஓயவில்லை என்றளவில், இனப்போர் முடிந்த சுமார் மூன்றாண்டுகளுக்கு பின்னரும், ஏன் எதிர்வரும் எத்தனையோ தசாப்தங்களிலும் பாதிப்புநிலையில் இருந்து முழுவதும் மீளாதவராக இருக்கப்போவதும் அவர்கள்தான்.

இப்போதைய வாக்களிப்பின் தாக்கத்தால் புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் நேரடியாக அதிக பாதிப்புகளுக்கு ஆளாகப்போவதில்லை. உண்மை என்னவோ, இன்றளவும் அவர்களில் பலரது உறவினரும் நண்பர்களும் இன்னமும் இலங்கையில்தான் வாழ்ந்து வருகிறார்கள். மீண்டும் இலங்கையில் இனப்பிரச்சினை ஏதாவது விதத்தில் தலை எடுக்காத பட்சத்தில், அரசியல் காரணங்களை காட்டி பிறநாடுகளில் அவர்களில் யாரும் "புகலிடம்" கோரமுடியாது. அவர்கள் செல்ல விரும்பும் மேலை நாடுகளும், எண்பதுகள் போல் அல்லாமல், இனப்போர் முடிந்துள்ள தற்போதைய அரசியல் புகலிடம் கோரும் இலங்கை தமிழ் மக்களை ஆதரவுக் கரம் நீட்டி அரவணைப்பார்கள் என்று எண்ண இடம் இல்லை.

பின்னர் ஏன் இந்த முன்னெடுப்பு? கடந்த தசாப்தங்களில் சில ஐரோப்பிய நாடுகளில் பிரஜாவுரிமை பெற்றுள்ள புலம்பெயர்ந்த தமிழர்கள், தேர்தல் முடிவுகளை தீர்மானிக்கும் நிலையில் உள்ளார்கள். அந்த புலம் பெயர்ந்த தமிழர்களால் கடந்து வந்த பாதையை மறக்க முடியவில்லை.

அவர்களது முறைகளும் முன்றையீடுகளும் சரியா, தவறா என்பதல்ல பிரச்சினை. சரியானாலும் தவறானாலும், அதனை தங்களுக்குள்ளாகவே நியாயப்படுத்தி முன்செல்லும் வகையில் சிந்தித்து செயற்படுபவர்கள். அவர்களைப் பொறுத்தவரையில், 2009ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் அடைந்த போர்த் தோல்வி இனப் பிரச்சினைக்கோ அல்லது இனப்போராட்டத்திற்கோ முன்னுரை என்று இல்லை என்றாலும், அது முடிவுரையும் அல்ல. மகாபாரதக் கதையில் கூறப்படுவது போல் தூரத்தில் உள்ள மரத்தின் கிளையில் இளைப்பாறும் கிளியின் கழுத்துமட்டுமே கண்ணில் படும் வில் வீரர்கள்.

அவர்களுக்கு, இலங்கையில் அல்லலுறும் தமிழ் மக்களின் பாதுகாப்பைவிட தங்களது "தனிநாடு" கொள்கையும் அதுசார்ந்த சர்வதேச அரசியலுமே தற்போது கண்ணில் படுகிறது. அவலங்களையும் ஆயுதமாக மாற்றி செயறபட்டுவந்த அவர்களுக்கு, சர்வதேச சமூகத்தின் தற்போதைய நிலைப்பாடு, விடுதலைப் புலிகள் இயக்கத்தோடு மாய்ந்துபோனதாக கருதப்பட்ட திட்டங்களையும் செயற்பாடுகளையும் மீண்டெடுத்து உயிர்ப்பிப்பதற்கான ஒரு வாய்ப்பு. அவ்வளவுதான்.

இவர்களில் பலரும் இலங்கைவாழ் தமிழர்களைப் பற்றி முறையான விதத்தில் கவலைப் படுவதைவிட, அவர்களின் தற்போதைய நிலைமையைக் காரணம் காட்டி இலங்கை அரசாங்கத்திற்கு சர்வதேச நெருக்கடி கொடுப்பதில் ஆத்ம திருப்தி காண்பவர்கள். இன்னும் சொல்லப் போனால், விடுதலைப் புலிகள்




இயக்கத்தின் கொள்கைகளையும் வழிமுறைகளையும் இன்னமும் ஏற்றுக்கொள்பவர்கள். அண்மையில் இருந்துகொண்டே அவர்களில் மூன்று இலட்சம் பேரை விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் "மனித கேடயமாக" பயன்படுத்தியிருந்தால், அப்பால் இருந்து அதே மக்களை தங்களது தொடரும் கொள்கைகளுக்கும் வழிமுறைகளுக்கும் கேடயமாக பயன்படுத்த தயங்காதவர்கள்.

ஜெனிவா வாக்கெடுப்பில் அமெரிக்காவின் தீர்மானம் நிறைவேறுமானால், அந்தத் தோல்வியை இலங்கை அரசால் ஜீரணித்துக் கொண்டு, செயற்படமுடியுமா என்பது தெரியவில்லை. வெளிஉலகின் புகார்களுக்கும் அப்பாற்பட்டு போரால் பாதிக்கப்பட்ட அப்பாவி தமிழ் மக்களுக்கு அரசும் சரி, இராணுவத்தினரும் சரி, பல்வேறு புனரமைப்பு மற்றும் மறுவாழ்வு திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் அரசியல் எதிர்பார்ப்புகளுக்கு ஈடு கொடுக்கிறார்களோ இல்லையோ, அதிகார பரவலாக்கும் திட்டம் குறித்து அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியாவது வந்தார்கள்.

ஜெனிவா வாக்கெடுப்பிற்கு பின்னர் இலங்கை அரசின் இந்தத் திட்டங்களில சுணக்கம் ஏற்படலாம். அந்த திட்டங்களை முன்னெடுத்துச் சென்ற ஆட்சியாளர்கள் விரக்தி அடையலாம். அதேசமயத்தில் அவர்கள் மத்தியில் உள்ள "சிங்கள பேரினவாதிகள்" தங்களது நிலைப்பாட்டை ஒட்டு மொத்த தமிழினமும் நியாயப்படுத்தி விட்டதாக மிதவாதிகளை மட்டம் தட்டலாம்.

வாக்களிப்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், தமிழர்கள் மத்தியில் காணப்படும் தீவிரவாத கொள்கை உள்ளவர்களும் சிங்கள பேரினவாதிகளின் எண்ணங்களுக்கு தூபம் போடும் வகையில் வேண்டுமென்றே செயற்படலாம். புலம்பெயர்ந்த தமிழர்களின் வெற்றிக் கோஷங்கள் சிங்களப் பேரினவாதிகள் காதில் நாராசமாய் பாயலாம். இதன் தாக்கமே பின்னர் தமிழ் இளைஞர்கள் மிதவாத போக்கைவிட்டு மீண்டும் செயற்படுவதற்கான நியாயமாக கூட பயன்படுத்தப்படலாம்.

வாக்கெடுப்பில் அமெரிக்கா தோல்வியைத் தழுவி, இலங்கை வெற்றி பெறும் சூழ்நிலை உருவாகுமேயானால், அதுவே அரசிற்கு உள்ளும் புறமும் சிங்கள பேரினவாதிகளுக்கு ஊக்க மாத்திரையாக அமையும். புலம்பெயர்ந்த தமிழரும் தங்களது இனம் மீண்டும் சர்வதேச சமூகத்தால் ஏமாற்றப்பட்டுவிட்டது என்று கூறி, விடுதலைப் புலிகள் இயக்கத்தின், தன் கையே தனக்கு உதவி என்ற நிலைப்பாட்டினை முழுவதுமாக கையிலெடுத்து, தீவிரமாக செயற்படலாம். இலங்கை வாழ் தமிழ் மக்களிடையே உள்ள. அவர்களது ஆதரவாளர்கள் தமிழ் அரசியலில் மிதவாதிகளை முற்றிலுமாக பின்தள்ளிவிட்டு, தலைமைப் பொறுப்புகளைப் பறித்து எடுத்துக் கொள்ளலாம்.

இதில் எதுவுமே முன்னால் நடந்திராதது அல்ல. கடந்த முப்பது ஆண்டு காலத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை முன்னிறுத்தி தமிழ் அரசியலும் ஆயுதப் போராட்டமும் செயற்பட தொடங்கிய காலகட்டத்தில இருந்தே இதுதான் நடந்துவந்துள்ளது. இதில் எது நடந்தாலும், எப்போது நடந்தாலும், அதனால் பாதிக்கப்படுபவர்கள் இலங்கை வாழ் தமிழர்கள் தான். அதன் தாக்கத்தை உணர்ந்து தானோ என்னவோ, தலைநகர் கொழும்பில் உள்ள சில தமிழ் வியாபாரிகள் அரசு ஆதரவு ஊர்வலம் ஒன்றை நடத்தியுள்ளனர். அது அவர்களது ஆதரவைவிட அச்சத்தின் வெளிப்பாடு என்றே காணப்படவேண்டும்


எது எப்படியோ, ஜெனிவா வாக்களிப்பு வந்தாலும் வந்தது, இலங்கை வாழ் தமிழினம் காணாமல் போய், கொஞ்சம் கொஞ்சமாக திரும்பி பெற்றுவந்த நிம்மதியையும் தூக்கத்தையும் இப்போதே மீண்டும் தொலைதுவிட்டார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது. கடந்தகால குற்றங்களின் பெயரால் இலங்கை அரசைத் தண்டிக்க எடுக்கப்பட்ட முயற்சிகளால் நாட்டில் வாழும் தமிழ் மக்கள் தங்களது எதிர்காலத்தையும் மீண்டும் தொலைத்துவிட்டார்களோ என்றே எண்ணத் தோன்றுகிறது.

## வாழும் பாத்திரத்தில் நடிப்பது சவால்!



ஏ.எம்.ஆர்.ரமேஷ் இயக்கும் படம், "வனயுத்தம்". சந்தனக்கடத்தல் வீரப்பன் வாழ்க்கையை தழுவி எடுக்கப்படும் இதில், கிஷோர், விஜயலட்சுமி, அர்ஜுன் உட்பட பலர் நடிக்கிறார்கள். வீரப்பனைப் பிடித்த பொலீஸ் அதிகாரி விஜயகுமார் பாத்திரத்தில் அர்ஜுன் நடிக்கிறார். "வாழ்ந்து கொண்டிருப்பவர்களின் வேடத்தில் நடிப்பது சவாலானது. நிறையப் படங்களில் பொலிஸ் அதிகாரியாக நடித்திருந்தாலும், இதில் யதார்த்தமாக நடித்திருக்கிறேன். வீரப்பன் கதை எல்லோருக்கும் தெரியும் என்பதால் ஆரம்பத்தில் தயங்கினேன். ஆனால் இயக்குநர் ரமேஷின் 12 வருட ஆய்வு, அவருடைய உழைப்பைப் பார்த்து வியந்து நடித்தேன். வீரப்பனுடன் வாழ்ந்தவர்களும், அவரால் கடத்தப்பட்டவர்களும் என்னுடன் நடித்திருக்கிறார்கள். இது எனக்கு புது அனுபவம். இந்தப் படம் எனது திரைவாழ்வில் முக்கியமான படமாக இருக்கும்" என்கிறார் அர்ஜுன்.

## ரமணரின் பயம்!



ரமணருக்குப் பால பருவத்தில் பாடம் நடத்திய ஆசிரியர் ஒருவர் ரமணர் பகவானாக அறியப்பட்ட பின் ஆசிரமத்துக்கு வந்தார். ஆதிநாள் சிஷ்யனை மகாகுருவாக உணர்ந்து ஆன்மிக வினாக்களை அவரிடம் கேட்டார் ஆசிரியர்.

உடனே ரமணர், "பள்ளியில் நீங்கள் கேட்ட கேள்விகளுக்குப் பயந்துதான் ஓடி வந்தேன். இங்கும் கேள்வி கேட்க வந்துவிட்டீர்களே!" என்று சிரித்தாராம்.

## விசித்திர வேர்கள்



- பின்லாந்து நாட்டில் வீளரும் பைன் மரங்களின் வேர்கள் பூமிக்குள் சுமார் 50 கி.மீ. தூரம் வரை செல்லும்.
- ஓக் மரத்தின் வேர்களையெல்லாம் தொடர்ச்சியாக வைத்தால் சுமார் 40 ஆயிரம் கி.மீ. நீளமிருக்கும்.
- காஸ்பிகா என்னும் பாலைவனத் தாவரத்தின் தண்டைவிட வேர்கள் 14 மடங்கு நீளமானவை.
- மூாங்ரோவ் மரத்தின் வேர்கள் நீருக்கு மேலே வளர்ந்து சுவாசிக்கின்றன.

# தமிழனின் கெத்து!

(இணையத் தளத்திலிருந்து இறக்கிய கதை)

மைக்ரோசொ.்ப்டின் ஐரோப்பிய தலைமைய கத்துக்கு ஒரு தலைமை நிர்வாகி தேவைப்பட்டது. ஆகவே ஒரு பெரிய நேர்முகத்தேர்வுக்கு பில். கேட்ஸ் ஏற்பாடு செய்தார். 5000 பேர் குழுமினர்.

அவர்களில் ஒருவன்தான் நம்ம ராமசாமி.

**பில் கேட்ஸ்:** இவ்வளவு பேர் வந்ததுக்கு மிக்க நன்றி. "ஜாவா தெரியாதவங்க எல்லாம் தயவு செய்து போயிடுங்க"

உடனே 2000 பேர் அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

ராமசாமி நினைக்கிறான், "ஜாவாவா? அப்படீன்னா என்ன? அதனால என்ன, இருந்துதான் பார்ப்போமே". கழுத்தையா சீவிடுவாங்க!

**பில் கேட்ஸ்:** குறைந்த பட்சம் 100 பேரையாவது மேய்த்து வேலை வாங்கியவர்கள் மட்டும் இருக்கவும்.

அடுத்த 2000 பேர் உடனேயே போயிடறாங்க.

ராமசாமி நினைக்கிறான், "யாரையும் நான் மேய்ச்சதில்லைதான். அதனால என்ன இருந்துதான் பார்ப்போமே. கழுத்தையா சீவிடுவாங்க!"



பில் கேட்ஸ்: மேலாண்மை டிப்ளோமாக்கள் இல்லாதவர் எல்லாம் தயவு செய்து போயிடுங்க. உடனே 500 பேர் இடத்தைக் காலி செய்யறாங்க.

ராமசாமி நினைக்கிறான், "நான் பி.யு.சி.-யோட படிப்பை விட்டாச்சு. அதனால என்ன, இருந்துதான் பார்ப்போமே. கழுத்தையா சீவிடுவாங்க!"

கடைசியா, பில் கேட்ஸ் சொல்றார், "செர்போ-குரோஷிய மொழி பேசத் தெரியாதவங்க இங்கே வேண்டாம்".

இதைக் கேட்டதும் 498 பேர் போய்விடுகிறார்கள்.

ராமசாமி நினைக்கிறான், "செர்போ-குரோஷிய மொழி பேசத் தெரியவே தெரியாதுதான். அதனால என்ன இருந்துதான் பார்ப்போமே. கழுத்தையா சீவிடுவாங்க!"


கடைசியா ராமசாமியும் இன்னும் ஒரே ஒரு ஆளும்தான் இருக்கிறார்கள். மீதி எல்லோரும் போய்விட்டார்கள்.

இப்போ பில் கேட்ஸ் இவர்களிடம் வருகிறார். "அப்போ உங்க ரெண்டு பேருக்குத்தான் செர்போ-குரோஷிய மொழி பேசத் தெரியும் அல்லவா. எங்கே ரெண்டு பேரும் அந்த பாஷையிலே ஒருத்தருக்கொருத்தர் பேசிக்கொள்ளுங்கள் பார்க்கலாம்".

அசால்ட்டா ராமசாமி அந்த இன்னொரு ஆளைப் பார்த்து பேசுகிறான், "நான் ராமசாமி, வத்தலகுண்டு சொந்த ஊரு. நீங்க எந்தப் பக்கம்".

இன்னொரு ஆள் சொல்றான், "நான் கிருஷ்ணசாமி, கும்பகோணம் பக்கம்".

# எழுதும் கலை -8




1. கும்மென்ற அமாவாசை இருட்டில் கண்ணிமைக்கும் நேரத்தில் வெட்டி மறையும் மின்னல்தான் சிறுகதை என்பர். அந்தக் கணப் பொழுதில் கண்ணில் படுவதை வைத்துக் காணாத சுற்றுப்புறத்தையும் ஊகித்து விடுவதில்லையா மனம்? நல்ல சிறுகதையும் இப்படித்தான்.

2. ஒரு இலட்சியச் சிறுகதையில், கதை நிகழ்கின்ற காலம், அதைப் படித்து முடிக்க எடுத்துக் கொள்ளும் நேரம் அளவே இருக்க வேண்டும் என்பர்.

3. கதை என்பது பெரும்பாலும் சொல்லிச் செல்லும் ஒன்றல்ல, காட்டிச் செல்வது. கண்கள் கதை அச்சாகி இருக்கும் பக்கங்களில் ஓட ஓட மனத்தில் காட்சிகள் விரிய வேண்டும். காட்சிகள் ஒளியலைகளாகிப் பல நூறு மைல்கள் பயணம் செய்து, தொலைக்காட்சிப் பெட்டியைத் திறந்தவுடன் அதே கணத்தில் மறுபடியும் காட்சிகள் விரிகின்றனவே, அந்த விரைவும் வேகமும் காட்சியின் ஒளியலைகளான எழுத்திற்கு வேண்டும்.

4. அச்சு இயந்திரங்கள் பெருகிப் பத்திரிகைகள் பிறந்த பின்னர், அவற்றின் தேவைக்காகவே பிறந்தது சிறுகதை. இன்றும் பத்திரிகைகளைச் சார்ந்தே அதன் தலைவிதி சுழன்று கொண்டுள்ளது. சுருங்கச் சொன்னால் சிறுகதை பத்திரிகைகளின் குழந்தை.

5. சிறுகதையின் உயிர்நாடியாக இருந்து, தானும் துடித்து, தன்னைப் படிப்பவர்களையும் துடிக்க வைப்பது - அக்கதைக்கு இடப்படும் பெயர். சிறுகதைக்குச் சூட்டும் பெயரை வைத்தே ஒருவரின் படைப்பாற்றலை எடைபோட்டுவிட முடியும்.

6. ஒரு நல்ல சிறுகதையின் உரைகல் அதன் தொடக்கம். முதல்வரியைப் படித்தவுடன் அது நம்மைக் கதைக்குள் ஈர்த்துவிட வேண்டும்.

7. ஒரு சிறுகதைக்கு முத்தாய்ப்பாக அமைந்து பெருமூச்சு விட வைப்பது அதன் கடைசி வாக்கியம். ஒரு நல்ல சிறுகதையின் முடிவு வாக்கியம், கதையை மீண்டும் தொடக்கத்திலிருந்து ஒருமுறை வேகமாகப் பார்க்க வைக்கும்.

8. ஒரு நல்ல சிறுகதை ஒரு நல்ல ராகம் போலத்தான். எடுப்பு, தொடுப்பு, முடிப்பு இரண்டிற்கும் வேண்டும்.

9. தீக்குச்சிகளால் வீடு கட்டி விளையாடிய அனுபவம் உங்களுக்குண்டா? ஒரு குறிப்பிட்ட கட்டத்தில், இருப்பதற்கு மேல் ஒரேயொரு குச்சியை வைத்தாலும், பாடுபட்டுக் கட்டிய அத்தனையும் சரிந்துவிடுமல்லவா? சிறுகதையையும் தீக்குச்சிகளால் கட்டப்படும் இத்தகைய வீட்டிற்குத்தான் ஒப்பிடுகிறார் பேட்ஸ் (H.E.Bates) என்னும் திறனாய்வாளர். கதையமைப்பிற்கோ, கதையில் உணர்த்தப்படும் செய்திக்கோ, கதைமாந்தர் உருவாக்கத்திற்கோ பயன்படாத ஒரேயொரு மிகையான வார்த்தையை அல்லது நிகழ்ச்சியைச் சிறுகதையில் சேர்த்தால் போதும், அது அதன் கட்டுக்கோப்பை எளிதில் சரித்துவிடும். முழுமையும் ஒருமையுணர்வும் எல்லாக் கலைப்படைப்புகளுக்கும் பொதுவானவைதாம். ஆனால் சிறுகதைக்கு அவை உயிர்நாடியானவை.

10. நடைமுறை வாழ்க்கையின் உண்மையை உணர்த்த கதையில் யதார்த்த வாழ்க்கைதான் காட்டப்பட வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. மனிதர்களின் நம்பிக்கைகளில் வாழும் எதுவும் கதையில் அவ்வுண்மையை நிலைநாட்ட வாயில் ஆகலாம்.

- இரா.தண்டாயுதம்.


# ஐன்ஸ்டீனின் கோட்பாடு பிழையாகவில்லை!

ஒளியை விட வேகமாகப் பயணிக்க எதனாலும் முடியாதென்பது ஐன்ஸ்டீனின் வாதமாகும். இதுவே 'Theory of Relativity' கோட்பாடு எனப்படுகின்றது. ஒளிக்கு திணிவில்லையென்பதனால் அதனை விட வேகமாகப் பயணிக்க எதனாலும் முடியாது என ஐன்ஸ்டீன் பல தசாப்தங்களுக்கு முன்னர் விளக்கியிருந்தார். வெற்றிடமொன்றில் ஒளியானது (light) ஒரு செக்கனில் 1,86,282 மைல்கள் பயணிக்கும். அதாவது 2,99,792 கிலோ மீற்றர். எனினும் இக்கோட்பாடு பிழையென விஞ்ஞானிகள் சிலர் கடந்த வருடம் தெரிவித்திருந்தனர்.

ஒளியை விட நியூட்ரினோ எனப்படும் அணுவியல் துகள்களால் வேகமாகப் பயணிக்க முடியுமெனவும், இதனை தாம் பல கட்ட ஆய்வுகளின் மூலம் உறுதி செய்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர். அவர்கள் செலுத்திய அணுவியல் துகள்கள் ஒளியின் வேகத்தினை விட 60 நெனோசெக்கன்கள் (60.7 billionths of a second) வேகமாகப் பயணித்ததாக அவ்விஞ்ஞானிகள் அடித்துக் கூறியிருந்ததுடன் அதனை நிரூபிக்கவும் தயார் எனத் தெரிவித்திருந்தனர்.

சுவிட்சர்லாந்து ஜெனிவாவில் அமைந்துள்ள ஐரோப்பிய அணு ஆராய்ச்சி நிறுவனத்தின் (CERN) பரிசோதனைக் கூடத்திலேயே இப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆராய்ச்சியானது பௌதிகவியலின் தூண்களில் ஒன்றாகக் கருதப்படும் ஐன்ஸ்டீனின் கோட்பாட்டையே அசைத்துப் பார்த்தது. எனினும் இதனைப் பல விஞ்ஞானிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனைத் தொடர்ந்து இவ் ஆராய்ச்சி முடிவின் உறுதித்தன்மை தொடர்பில் பல சர்ச்சைகள் எழுந்தன.


இந்நிலையில் இதே ஆராய்ச்சியை நோபல் பரிசுபெற்ற இத்தாலிய பௌதிகவியலாளரான கார்லோ ரூபியா மற்றும் அவரது குழுவினர் மேற்கொண்டனர். இதன்படி நியூட்ரினோ எனப்படும் அணுவியல் துகள்களால் ஒளியை விட வேகமாகப் பயணிக்கமுடியவில்லை என இவர்களது ஆய்வின் முடிவில் தெரிவித்



துள்ளனர். மேற்படி ஆய்வும் முன்னைய ஆய்வினைப் போலவே சுவிட்சர்லாந்து ஜெனிவாவில் அமைந்துள்ள ஐரோப்பிய அணு ஆராய்ச்சி நிறுவனத்தின் (CERN) பரிசோதனைக்கூடத்திலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை ஒளியை விட வேகமாக அணுவியல் துகள்களால் பயணிக்கமுடியும என ஆய்வறிக்கை வெளியிட்ட விஞ்ஞானிகள் குழுவும் தமது பரிசோதனை முடிவில் சில தொழில்நுட்ப குளறுபடிகள் காணப்பட்டதாக கடந்த மாதம் தெரிவித்திருந்தது. இந்நிலையில் தற்போது வெளியிடப்பட்டுள்ள புதிய ஆய்வின் முடிவும் அணுவியல் துணிக்கைகளால் ஒளியை விட வேகமாகப் பயணிக்க முடியவில்லை என்ற முடிவையே சுட்டிக் காட்டுகின்றன. எனவே ஆய்வில் தவறு விட்டது தற்கால விஞ்ஞானிகளே என்ற முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது.


# உலகின் மிக நீளமான நகங்களை கொண்ட பெண்!



அமெரிக்காவைச் சேர்ந்த பெண்ணொருவர் உலகில் அதிக நீளமான கைவிரல் நகங்களைக் கொண்ட பெண்ணென கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார். அமெரிக்காவின் லாஸ் வேகாஸ் நகரைச் சேர்ந்த கிறிஸ்டைன் வோல்டன் என்ற 45 வயதான இப்பெண்ணின் கைவிரல் நகங்களின் மொத்த நீளம் 19அடி 9 அங்குலம்.

இவரது வலது கை நகங்களின் நீளம் 9 அடி 7 அங்குலமும், இடது புறத்திலுள்ள நகங்களின் நீளம் 10அடி 2அங்குல நீளமாகவும் காணப்படுகின்றது. தொழில்சார் பாடகரான கிறிஸ்டைன் தனது 18 ஆவது வயதில் நகங்களை வளர்ப்பதற்கு ஆரம்பித்துள்ளார்.

இவருக்கு முன் உலகிலே அதிக நீளமான கைவிரல் நகங்களைக்கொண்ட பெண்ணாக அமெரிக்காவின் சோல்ட் லேக் சிட்டியை சேர்ந்த லீ ரேமன்ட் என்பவர் இருந்தார். அவரின் நகங்களின் நீளம் 28 அடியாகும். ஆனால் 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற கார் விபத்தில் அவரது நகங்கள் முறிந்துவிட்டன.



# மற்றவர்க்காய்...

என்னை நான் மறந்துவிட்டு
மற்றவர்க்காய் காரியங்கள்
செய்யவேண்டும் என
நீ சொல்கிறாய்.
படுத்துக்கொண்டு யோசிக்கும் போதும்
தனியாக நடந்து போகும் போதும்
என்னைச் சுற்றியே என்
பிரக்ஞை உழலுகிறது.
ஏன், நான் இறந்து போகும்போது கூட
என்னைப் பற்றியே என்
நினைவுகள் இருக்கும்.
ஆக, எப்படியும் என்னை
முதலில் சரிசெய்து கொள்ள வேண்டும்.
ஒருவேளை அதுதான்
நான் மற்றவர்க்காய் செய்யும் காரியமோ!

- ஆர்.ராஜகோபாலன்

# சர்வதேசத்தின் அழுத்தத்திற்கு இலங்கை செய்த தவறு என்ன?

## கேட்கிறார் பிரதமர்



(கொழும்பு) சர்வதேச நாடுகள் எம் மீது இவ்வளவு இறுக்கமான நடவடிக்கையை மேற்கொள்ள நாம் செய்த தவறு என்னவென்று புரியவில்லையென பிரதமர் டி.எம்.ஜயரட்ன கேள்வி எழுப்பியுள்ளார்.

கண்டி - கெட்டம்பேயிலுள்ள மகிந்த ராஜபக்ஷ தகவல் தொழில்நுட்ப கேந்திர நிலையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெறற வைபவ மொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

எமது தாய்நாட்டை நேசிக்கும் ஒவ்வொருவருக்கும் பொறுப்பும் கடமையும் உண்டு. அதுவே இக்கட்டான இந்நேரத்தில் நாம் பொறுமை காப்பதாகும். தற்போது சர்வதேச ரீதியாக எமது நாட்டிற்கு ஏற்பட்டுள்ள அழுத்தத்திற்கு எதிராக சகல அரசியல் கட்சிகளும் ஒரே கருத்தை கொண்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

அமெரிக்கா உட்பட மேற்கத்தேய நாடுகளினால் இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்படவுள்ள சூழ்ச்சியை எதிர்கொள்ள நாம் தயா ராகியுள்ளோம். "கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின்" சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துமாறு அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து அரசாங்கம் தற்போது ஆராய்ந்து வருகிறது. ஜனாதிபதி மகிந்த ராஜபகஷ "கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு" அறிக்கையை மூன்று பிரிவுகளின் அடிப்படையில் தற்போது ஆராய்ந்து வருகிறார்.

அரசியல் ரீதியில் எமக்கிடையே பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும், நாடு என்ற வகையில் எமக்கு எதிராக ஏதாவது சவால்கள் ஏற்படுமாயின் அதனை எதிர்கொண்டு வெற்றி பெற அனைவரும் ஒரு பொது நோக்கத்தின் கீழ் இணைய வேண்டும். இதனைத் தவிர வேறெந்த வழியும் கிடையாது.

நாட்டில் தலைவர்கள் மாறலாம். கட்சிகள் மாறலாம். அரசாங்கங்கள் மாறலாம். வெற்றி, தோல்விகள் ஏற்படலாம் ஆனால் எமது இறைமை, சுதந்திரம், தன்னாதிக்கம் என்பவை பாதுகாக்கப்பட வேண்டும் என்றார்.



சோமாலிய மக்களுக்காக பத்தாயிரம் மெற்றிக்தொன் அரிசியை அரசு நன்கொடையாக வழங்கியுள்ளது. அலரிமாளிகையில் இடம்பெற்ற நிகழ்வில் ஜனாதிபதி, நன்கொடைக்கான பத்திரத்தை உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான பதில் வசிப்பிடப் பணிப்பாளர் அஸப் எஸ்ரட்டிடம் கையளிப்பதனைக் காணலாம்.

# பிரபாகரனைக் காப்பாற்ற எஸ்.எம்.எஸ். அனுப்பிய பிளேக்



(கொழும்பு)


அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் நோர்வே போன்ற நாடுகள் போரைத் தடுப்பதற்கு பலவேறு வழிகளில் முயற்சி செய்தன. இந்த நிலையில், முன்னாள் அமெரிக்கத் தூதுவர் ரொபர்ட் ஓ பிளேக், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு எஸ்.எம்.எஸ் அனுப்பி பிரபாகரனை மீட்க முயற்சி செய்தார் என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் இலங்கைக்கு விஜயம் செய்து, ஜனாதிபதிக்கு அழுத்தங்களைப் பிரயோகித்தனர். எனினும், இந்த எந்தவொரு அழுத்தத்திற்கும் ஜனாதிபதி அடிபணியவில்லை.

நந்திக்கடல் போர் பற்றி மக்கள் அறிந்திருந்தபோதும், சம காலத்தில் கொழும்பில் இடம்பெற்ற சர்வதேச இராஜதந்திர போர் பற்றி பலருக்குத் தெரியாது. சரியான தீர்மானங்களை எடுக்காத காரணத்தினால் இதற்கு முன்னர் ஆட்சி செய்த தலைவர்களினால் போரை வெற்றிகொள்ள முடியவில்லை என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

# சி.ஐ.ஏ. புலனாய்வு முகவராக இந்திய பிரதமர் மன்மோகன்

## குற்றஞ்சாட்டுகிறார் குணதாச



(கொழும்பு)

அமெரிக்காவின் சி.ஐ.ஏ புலனாய்வு முகவராக இந்திய பிரதமர் மன்மோகன்சிங் செயற்படுவதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்க தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக அமெரிக்காவுடன் இந்தியா மேற்கொண்ட சூழ்ச்சி தற்போது வெளிப்பட்டுள்ளதாகவும்,

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் தெரிவித்துள்ளார்.


அமெரிக்காவைப் போலவே, இந்தியாவும் இலங்கையை அடிமைப்படுத்த முயற்சிக்கின்றது.

இந்தியாவின் இந்தத் தீர்மானம் குறித்து அதிர்ச்சியடைய வேண்டியதில்லை. கடந்த இரண்டு தசாப்தங்களாக இந்தியா திரைமறைவில் மேறகொண்டு வந்த திட்டமே தற்போது வெளிப்படடுள்ளது.

அமெரிக்காவைப் போலவே, இந்தியாவும் தமது வல்லரசு ஆதிக்கத்துக்குள், இலங்கையை துண்டாக்கி, அதனை தமது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள முற்பட்டுள்ளது. இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி இத்தாலிய பெண் என்பதுடன், மன்மோகன் சிங் ஹாவர்ட் பல்கலைக்கழக மாணவர் ஆவார். இவர்கள் இருவரும் அமெரிக்காவின் சி.ஐ.ஏ எனப்படும் பொலிஸ் ஒற்றர் குழுவின் முகவர்களாகச் செயற்பட்டு வருகின்றனர்.

காந்தி, நேரு போன்ற நேர்மையான தலைவர்கள் இருந்திருந்தால், இலங்கைக்கு இவ்வாறான நிலை ஏற்பட்டிருக்காது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பெருநகர வேக ரயில் 2016 முதல் சேவையில்



(கொழும்பு)

இலங்கையில் முதன் முறையாக அதிவேக பெருநகர வேக ரயில், சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து கோட்டை ரயில் நிலையம் வரை இந்தப் பெருநகர வேக ரயில், சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

முதலீட்டாளர்கள் மலேசியா, அமெரிக்கா மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகளிலிருந்து வருவார்கள் என விமான எக்ஸ்பிரஸ் மற்றும் ரயில் கம்பெனி லிமிடெட் நிறுவனத் தலைவர் பரிமலன் ராஜோ இசாமைக்கல் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

வேலைத் திட்டம் நிறைவடைந்தால் கட்டுநாயக்கவிலிருந்து கொழும்புக்கு நாளாந்தம் 18 ரயில்களை சேவையில் ஈடுபடுத்த எதிர்பார்த்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இத்திட்டத்தின் ஊடாக சுமார் 1000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2016 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

# அச்சுறுத்தல்களை முறியடிப்பதற்கு அனைவரும் ஒன்றிணைவது அவசியம்

## அழைப்பு விடுக்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

முப்பது வருட யுத்தத்துக்குப் பின், நாடு அபிவிருத்தியில் கட்டியெழுப்பப்பட்டு வரும் இத்தருணதில் வெளிநாட்டு அழுத்தங்களுக்கு இடமளிக்க முடியாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அதேவேளை, நாட்டுக்கு எதிராக அச்சுறுத்தல்கள் வரும்போது அரசியல், கட்சிபேதம் பார்க்காது எதிர்க்கட்சி உட்பட சகலரும் ஒனறிணைந்து செயற்படுவது முக்கியமெனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டிற்கும் மக்களுக்குமான பொறுப்புகளை நிறைவேற்றுவதில் எவ்வித பேதங்களுக்கும் இடமில்லை எனத் தெரிவித்த ஜனாதிபதி, அனைத்துத் தரப்பினரும் பொறுப்புடன் செயற்படுவது அவசியம் எனத் தெரிவித்தார். மக்களுக்குப் பொறுப்புக் கூறுபவர்களாகவும் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாகவும் அரசியல்வாதிகள், அதிகாரிகள் செயற்படுவது முக்கியமெனவும் அவர் தெரிவித்தார்.

புத்தளம் மாவட்ட விசேட அபிவிருத்திக் கூட்டம் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் மாதம்பே கூட்டுறவு மண்டபத்தில் நடைபெற்றது.

அமைச்சர்கள் பசில் ராஜபக்ஷ, எஸ். எம். சந்திரசேன பந்துல குணவர்தன, பியங்கர ஜயரத்ன உட்பட அமைச்சர்கள், மாகாண பிரதேச சபை உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் பலரும் கலந்துகொண்ட இந்த நிகழ்வின் இறுதியில் உரை நிகழ்த்திய ஜனாதிபதி தமதுரையில் மேலும் தெரிவித்ததாவது,

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிகள் பொறுப்புடன் செயற்படுவது அவசியம். சில சம்பவங்கள் தொடர்பில் முழு நாட்டினதும் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. நாட்டின் நற்பெயரைக் கெடுக்கும் விதத்தில் எவரும் செயற்படக்கூடாது.

எமக்குக் கிடைத்த சகல முறைப்பாடுகள் சம்பந்தமாகவும் நாம் கவனம் செலுத்தி வருகின்றோம். மாவட்ட ரீதியில் பார்க்கப்பட வேண்டிய பல விடயங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அது பற்றி நான் அறிவித்து உரிய நடவடிக்கைகள் எடுப்பேன் என மேலும் தெரிவித்தார்.

# அமெரிக்காவின் பிரேரணைக்கு கொள்கை அடிப்படையில் எதிர்ப்பு



(கொழும்பு) அமெரிக்காவின் பிரேரணையை கொள்கை அடிப்படையில் எதிர்ப்பதாக அரசாங்கம் அறி வித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டுவரப்பட உள்ள தீர்மானம் தொடர்பில் சிரேஸ்ட அமைச்சர் டியூ குணசேகர கருத்து வெளியிட்டுள்ளார்.

பிரேரணையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களுக்காக இலங்கை எதிர்ப்பை வெளியிடவில்லை.இந்தப் பிரேரணையில் இலங்கைக்கு எதிரான கருத்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்பது எமக்குத் தேவையில்லை.

எனினும், இலங்கை போன்ற இறைமையுடைய நாடொன்றிற்கு எதிராக இவ்வாறான பிரேரணை நிறைவேற்றப்படுவதனை கொள்கை அடிப்படையில் ஏற்றுக் கொள்ள முடியாது.

மூன்றாம் உலக நாடுகள் அனைத்திற்காகவுமே நாம் குரல் கொடுக்கின்றோம். நட்பு நாடுகளுடனான உறவுகளை பலவீனப்படுத்தும் நோக்கில் இந்தப் பிரேரணை கொண்டுவரப்படுகின்றது.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் பகைமையை ஏற்படுத்த முயற்சிக்கப்படுகின்றது.

இந்தியத் தலைவர்கள் அறிவுடையவர்கள் இதனால் மோதலகள் ஏற்பட வாய்ப்பில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

1) சிங்கள மொழி மூல மாணவர்களின் எண்ணிக்கை யாது?

........................................................................................................

2) சிங்கள மொழி மூல மாணவர்களுக்கும், தமிழ் மொழி மூல மாணவர்களுக்கும் இடையிலான வித்தியாசம் எவ்வளவு?

........................................................................................................


3) தமிழ் மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றும் பெண் மாணவிகள் எத்தனை பேர்?

........................................................................................................


4) ஒரு வகுப்பறையில் 20 மாணவர்கள் மாத்திரமே பரீட்சை எழுத முடியும் எனில், புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள எல்லா மாணவர்களுக்கும் எத்தனை வகுப்பறை தேவைப்படும்?

........................................................................................................

5) சிங்கள மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவிகளைக் காட்டுகின்ற நிரல் வரைபை நிழற்றுக.





44) பின்வரும் உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியைப் பின்னமாகவும் தசம எண்ணாகவும் எழுதுக.



1) பின்னம்..................................................

2) தசமம்..................................................

45)  எதிரே காட்டப்பட்டுள்ள உருவில் எத்தனை நாற்பக்கலை இனம்காண முடியும்?

........................................................................................................

46) 8 m நீளமும், 5 mஅகலமும் கொண்ட சுவருக்கு வர்ணம் பூசுவதற்கு 2 லீற்றர் தீந்தை எனில், 5 m நீளமும் 2 m அகலமும் கொண்ட சுவருக்கு வர்ணம் பூச எவ்வளவு தீந்தை தேவை?

........................................................................................................


47) நிஸாம், அவனது தாய் ஆகியோரின் நிறை 64 Kg ஆகும். நிஸாமின் தாயின் நிறை, நிஸாமின் நிறையின் மூன்று மடங்கு ஆயின், நிஸாமின் நிறை எவ்வளவு?

........................................................................................................

48) இரவு 11.50 மணிக்கு விமரன நிலையத்தை வந்தடைய வேண்டிய விமானமொன்று 15 நிமிட தாமதத்தின் பின், விமான நிலையத்தை வந்தடைந்தது எனின், விமானம் வந்தடைந்த நேரத்தை 24 மணிநேரக் கடிகார முறையில் தருக........................................................................................................

49) ஒரு நீளமான வாங்கில் சில மாணவர்கள் அமர்ந்துள்ளனர். இதில் மகிந்த, முன்னாலிருந்து கணக்கிடும்போது 5 ஆவதாக அமர்ந்துள்ளான். பின்னாலிருந்து கணக்கிடும்போது மூன்றாவதாக அமர்ந்துள்ளான் எனில், வாங்கில் அமர்ந்துள்ள மாணவர் எண்ணிக்கை யாது?

........................................................................................................



50) அருகில் தரப்பட்டுள்ள உருவில் நிழற்றப்பட்டுள்ள உருவின் பரப்பளவு 2 எனில் உருவின் மொத்தப் பரப்பளவு எவ்வளவு?........................................................................................................

**கடந்த புதன்கிழமை வெளியான வெளியீடு - 43 கேள்விகளின் விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 01) 1 | 09) 1 | 17) RHBE | 25) 4 | 33) 2 |
| 02) 2 | 10) 2 | 18) 20 | 26) 4 | 34) 2 |
| 03) 3 | 11) 1 | 19) 25 வீதம் | 27) 1 | 35) 2 |
| 04) 1 | 12) 1 | 20) 175 | 28) 2 | 36) 2 |
| 05) 3 | 13) 2 | 21) நெல்லி, மாதுளை | 29) 2 | 37) 2 |
| 06) 2 | 14) 2 | 22) சுளகு | 30) 2 | 38) 3 |
| 07) 1 | 15) 2 | 23) 2 | 31) 1 | 39) 1 |
| 08) சனி | 16) 2 | 24) 2 | 32) 2 | 40) 3 |







# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - II

1 மணி 15 நிமி

# கல்வி முரசு

வெளியீடு 44



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**பின்வரும் பாடலைக் கவனமாக வாசிக்கவும்.**

சுத்தமுள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு. நீ அதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே

கூழையே நீ குடித்தாலும்
குளித்த பின் குடியப்பா!
ஏழையே நீ ஆனாலும்
இரவில் நன்றாக உறங்கப்பா!

**இப்பாடலைப் பயன்படுத்தி 1-6 வரையுள்ள வினாக்களுக்கு விடைதருக.**

01) "எங்கே சுகம் உண்டு" எனக் கவிஞர் குறிப்பிடுகின்றார்?..................................................

02) இங்கு இடம்பெறும் வரிசை மொழி எது?..................................................

03) "சுகம்" என்பதன் ஒத்த சொல்லை எழுதுக..................................................

04) "ஏழை" என்பதன் எதிர்ச்சொல்லை எழுதுக..................................................

05) கூழைக் குடிக்க முன்பு என்ன செய்ய வேண்டும்?..................................................

06) இப்பாடலுடன் தொடர்புடைய பழமொழியொன்றை எழுதுக..................................................

**7ஆம், 8ஆம் வினாக்களிலுள்ள ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை எழுதுக.**

07) ஒற்றைக் காலில் நிற்றல்..................................................

08) உச்சி குளிர்தல்..................................................

09) 'அடர்ந்த சோலையொன்றில் பூக்கள் பூத்திருந்தன' இதனை ஒருமை வாக்கியமாக எழுதுக.

..................................................

10) பொருத்தமான நிறுத்தற் குறியீடுகளை இடுக.

குகன் உன்னுடைய பயிற்சிக் கொப்பியைக் கொண்டு வா

**பின்வரும் பந்தியை வாசித்து 11 - 14 வரையுள்ள வினாக்களுக்கு விடைதருக.**

மட்டக்களப்பு நகரின் திருமலை வீதியிலுள்ள 155 ஆம் இல.வீட்டிலே 1998 ஆம் ஆண்டு மே மாதம் ஐந்தாம் திகதி பிறந்த டேவிற், மட்டக்களப்பு நகரிலுள்ள பிரபல பாடசாலையான புனித மிக்கேல் கல்லூரியில் தரம் -5 வகுப்பில் கல்வி கற்கின்றான். இவனது அப்பாவான ஜேம்ஸ் அதே பாடசாலையில் கற்பிக்கின்றார்.

**பின்வரும் அட்டைப் பத்திரத்தை நிரப்புக.**

11) முழுப்பெயர்..................................................

12) கற்கும் தரமும், வகுப்பும்..................................................

13) பிறந்த திகதியும்..................................................

14) 01.08.2008 ஆம் திகதியன்று வயது..................................................

வருடங்கள் ☐ மாதங்கள் ☐ நாட்கள் ☐

15) பின்வரும் ஆங்கில வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.

What is this?..........................................................................................

16) பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.

என்னை மன்னியுங்கள்..........................................................................................

17) "ஔயாகே நம மொக்க(த்)த" என்பதன் கருத்தைத் தமிழில் எழுதுக..........................................................................................

18) "பாடம் படியுங்கள்" என்று சிங்களத்தில் கூறப்படுவதைத் தமிழில் எழுதுக..........................................................................................

**19 - 35 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையின் கீழ்க் கோடி ;க.**

19) பின்வரும் இலை வகைகளிடையே என்ணெய் பெற உதவும் இலை வகை எது?
1) மிளகு இலை 2) கறுவா இலை 3) ரோஜா இலை 4) ராபு இலை

20) இயற்கையில் தாமாகவே தாவர வேரிலிருந்து கன்று / நாற்றுக்கள் முளைக்கும் தாவரம் எது?
1) பலா 2) லொவி 3) கறிவேப்பிலை 4) வத்தாளை

21) இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தீப்பெட்டி, சைக்கிள் ரியூப் போன்ற பொருட்களை கொள்வனவு செய்யும்போது அவற்றின் தரத்தை எவ்வாறு அறியலாம்?
1) உற்பத்தியாளரின் பதிவு இலக்கம் 2) ISO சான்றிதழ்
3) SLA சான்றிதழ் 4) ISBN சான்றிதழ்

22) பௌத்த மதத்தினர் புனித மரமாக கருவி வழிபடும் வெள்ளரசு மரம் காணப்படும் புராதன நகரம் எது?
1) தம்புள்ள 2) கம்பளை 3) மிகுந்தலை 4) கண்டி


23) உணவு உண்ணும் வேளை கடைப்பிடிக்க வேண்டிய சுகாதாரப் பழக்க வழக்கம் எது?
1) தேசிய உணவான அரிசிச் சோற்றை உண்ணுதல் 2) உடன் உணவு வகைகளை உண்ணுதல்
3) வாயிலிருந்து சத்தம் எழாதவாறு உண்ணுதல் 4) உணவை மெல்லாது விரைவாக விழுங்குதல்

24) இடி, மின்னலுடன் மழை பெய்யும்போது, பாதுகாப்புக்காகப் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் எது?
1) ஆறு, குளம், நீச்சல் தடாகம் போன்றவற்றில் நீந்துதல்
2) விளையாட்டு மைதானத்தில் விளையாடுதல்
3) வீட்டினுள் இருத்தல்
4) மின் சாதனங்கள் பாவனையைத் தவிர்த்தல்


25) மஞ்சள் நிறமுடைய பழங்கள், காய்கறிகள் போன்வற்றைத் தினமும் உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் தவிர்க்கக் கூடிய குறைபாட்டு நோய் எது?
1) கண்டமாலை 2) மாலைக்கண் 3) குருதிச்சோகை 4) ஸ்கேவி நோய்

26) மின்காந்தம் பயன்படுத்தப்படும் மின்சாதனம் பின்வருவனவற்றுள் எது?
1) மின்ம ணி 2) மின்குமிழ் 3) பாரம்தூக்கி 4) மின் அடுப்பு

27) இரவு வானில் தோன்றும் உடுத்தொகுதிகளில், சிம்ம உடுத்தொகுதி எது?
1) 2) 3) 4)



28) இலங்கையில் பிரசித்திபெற்ற விளையாட்டுக்களில் ஒன்றின் வரிப்படம் அருகில் தரப்பட்டுள்ளது. இந்த விளையாட்டில் ஒரு குழுவில் விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 6 2) 7 3) 11 4) 16



29) இலங்கையில் குடியரசு ஆட்சி மலர்ந்த ஆண்டு எது?
1) 1948 2) 1956 3) 1972 4) 1978

30) மஞ்சள் நிறப் பின்னணியில் காணப்படும் இவ்வீதிச் சமிஞ்ஞை எதனைக் குறிப்பிடுகின்றது?
1) முன்னால் பாதசாரிகள் கடவை 2) முன்னால் பாடசாலை
3) முன்னால் சிறுவர் கடவை 4) முன்னால் வாகன சாரதிகள் கடவை








31) நீண்ட நாட்கள் வாடாத, வாசனையற்ற பூ பின்வருவனவற்றுள் எது?
1) கொடிமல்லிகை 2) கடதாசிப் பூ 3) செவ்வந்திப் பூ 4) கொன்றைப் பூ

32) பண்டைய மன்னர்கள் போரில் வெற்றியீட்டியதைத் தெரிவிக்க இசைக்கும் வாத்தியக் கருவி எது?
1) 2) 3) 4)



33) பொதி செய்யப்பட்ட உணவு வகை, மருந்து வகை அடங்கிய பொதியினுள்ளே, வளியிலுள்ள நீராவியை உறிஞ்சுவதற்காக இடப்பட்டிருக்கும் சிறுபைக்கற்றினுள் காணப்படும் பதார்த்தம் எது?
1) சிலிக்கா ஜெல் 2) சுண்ணாம்பு 3) நீராவி உறிஞ்சி 4) இரும்புத் தூள்

34) பதிவுத் தபால் ஒன்றை உள்நாட்டில் அனுப்புவதற்கு ஒட்ட வேண்டிய முத்திரைகளின் பெறுமதி யாது?
1) 16.50 2) 20.00 3) 26.00 4) 30.00

35) மனிதருக்கும், பயிருக்கும் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை விரட்டுவதற்கு கிராமப் புறங்களில் பயன்படுத்தப்படும் தாவரம் எது?
1) வேம்பு 2) ஆமணக்கு 3) மதுரை 4) கீழ்க்காய் நெல்லி

**பொதுமக்கள் பின்வரும் சேவைகளைப் பெறச்செல்ல வேண்டிய இடம் எவை என புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

36) கடவுச் சீட்டைப் பெறுதல்..........................................................................................

37) பிறப்புச் சான்றிதழ் பிரதி எடுத்தல்..........................................................................................

**அடைப்புக்குள் தரப்பட்டுள்ள சொற்களில் சரியான சொல்லைத் தெரிவு செய்து அதனைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

சீவுளி, பொலிகாளை, Hello, காளை, மட்டப்பலகை, வளியூட்டி, Thanks, துருத்தி

38) உலகிலுள்ள மனிதர்களில் அனேகர் பயன்படுத்தும் ஆங்கில வார்த்தை ஆகும்.

..........................................................................................

39) சூடு மிதிக்கும் இடத்தில் எருதுகளை என அழைப்பர்.

..........................................................................................

40) அடுப்பு எரிவதற்கு காற்றை வழங்கும் கருவி ஆகும்.


..........................................................................................

41) மரப்பலகையை அழுத்தமாக்கப் பயன்படுத்தப்படும் கருவி ஆகும்.

..........................................................................................

42) பின்வரும் அடைப்புக்குள் சில தாவரங்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றின் ஒவ்வொரு உருவிற்கும் பொருத்தமான பெயரைத் தெரிவு செய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

சாத்தாவாரி, இஞ்சி, மிளகு, கறிவேப்பிலை, எலுமிச்சை, வேம்பு, கோரை, ஆவரசு



1).......................... 2).......................... 3).......................... 4)..........................

43) புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக ஒரு பரீட்சை நிலையத்திற்கு வருகை தந்த மாணவர்கள் பற்றிய விபரங்கள்.

| பாடசாலை | சிங்கள மொழி மூல மாணவர்கள் | | தமிழ் மொழிமூல மாணவர்கள் | |
|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1) மகிந்த வித்தியாலயம் | | 43 | 61 | – |
| 2) சேனநாயக்க வித்தியாலயம் | 28 | 24 | 18 | 32 |
| 3) அந்தோனியார் பாடசாலை | 49 | 46 | 29 | 28 |
| 4) மகாமாய கல்லூரி | – | 72 | – | – |
| 5) மகாஜனக் கல்லூரி | – | – | 63 | 62 |

# தெல்லிப்பளை யூனியன் வலைப்பந்து சம்பியன்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற 19 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான வலைப் பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியும் மோதிக் கொண்டன.

இதன்போது, முதல் பாதி ஆட்டமும் இரண்டாம் 'பாதி ஆட்டமும் தலா 13 புள்ளிகள் என்ற அடிப்படையில் முடிவடைந்தன.

இவ்விரு அணிகளுக்குமான வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க மேலதிகமாக ஐந்து நிமிங்கள் வழங்கப்பட்டன.

இதிலும் முதல் இரண்டரை நிமிடத்தில் இரு அணிகளும் தலா 2 புள்ளிகளைப் பெற்று சம நிலையில் காணப்பட்டன.

போட்டி முடிவடைவதற்கு ஒரு சில செக்கன்களே இருந்த நிலையில் யூனியன் கல்லூரி ஒரு புள்ளியைப் பெற்று வெற்றிபெற்றது.

மேற்படி இரு அணிகளும் மாவட்ட மட்டத்தில் மோதும் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரதேச மட்ட கால்பந்து விநாயகர் அணி சம்பியன்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளைப் பிரதேச மட்ட கால்பந்தாட்டப் போட்டியில் அளவெட்டி விநாயகர் அணி சம்பியன் பட்டத்தை வென்றது. இப்போட்டி கடந்த 17ஆம் திகதி யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் அளவெட்டி விநாயகர் அணியும், தெல்லிப்பளை நாமகள் அணியும் மோதின.

இதில் அளவெட்டி விநாயகர் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் இளவாலை சென்லூட்ஸ் அணியும், மல்லாகம் ஆர்.டி.எஸ். அணியும் மோதின. இதில் சென்லூட்ஸ் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் விநாயகர் அணியும், சென்லூட்ஸ் அணியும் மோதின.

இரு அணிகளும் சிறப்பான முறையில் ஆடி ரசிகர்களை பரவசப்படுத்தினர். போட்டி நிறைவுக்கு வந்த வேளை இரு அணிகளும் ஒவ்வொரு கோலைப் போட்டிருந்தது.

. இதன்காரணமாக தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் 4-3 என்ற கோல் கணக்கில் அளவெட்டி விநாயகர் அணி வெற்றி பெற்று பிரதேச மட்ட சம்பியனானது. (93)

# இல்ல விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கல்லூரியின் வீரசங்கிலியன் மைதானத்தில் பீடாதிபதி எஸ். கே. யோகநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கல்வி அமைச்சின் ஆசிரிய கலாசாலைகளுக்கான பணிப்பாளர் திருமதி டபிள்யூ.பி.ஆர்.சில்வா, சிறப்பு விருந்தினர்களாக கல்வி அமைச்சின் தமிழ்ப் பாடசாலைகள் அபிவிருத்திப் பிரிவுப் பணிப்பாளர் எஸ். முரளிதரன், முஸ்லிம் பாடசாலைகளின் அபிவிருத்திப் பிரிவுப் பணிப்பாளர் சற். தாயூடீன், வடமாகாண அபிவிருத்திப் பிரிவுத் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எப்.எம். ராவி, கௌரவ விருந்தினராக லிவப்பூல் நவிகேசன் பிரைவேட் லிமிட்டெட் தலைவர் எஸ். வின்சன்ராஜன் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# வல்வை வெற்றி

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை லீக் கால்பந்தாட்ட கழகம் நடாத்திய கால்பந்தாட்டப் போட்டியில் வல்வை அணி 4:2 என்ற கோல் அடிப்படையில் வெற்றிபெற்றது. அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக அரங்கில் கடந்த 19ஆம் திகதி நடைபெற்ற இப்போட்டியில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து வல்வெட்டித்துறை வல்வை அணி மோதியது.

இரு அணிகளும் இடையிடையே தவறான ஆட்டத்திற்கு சென்றவேளை இரு அணிகளுக்கும் மஞ்சள் அட்டை காட்டப்பட்டது. குற்றங்கள் புரிந்த நிலையில் வல்லை அணி சிறப்பாக ஆடி வெற்றியை தனதாக்கிக் கொண்டது.

இப்போட்டியில் பிரதம நடுவராக எஸ். சுரேந்திரா, பக்க நடுவர்களாக ரி. ரஜதன், ரி. திவாகர் ஆகியோர் கடமையாற்றினர். (எஸ்)

# பெண்கள் கால்பந்து இலங்கை மூன்றாமிடம்



(கொழும்பு)

சமபோஷ அனுசரணையில் இலங்கையில் இடம்பெற்ற தெற்கு மற்றும் மத்திய ஆசிய 13 வயதுக்குட்பட்ட பெண்கள் கால்பந்தாட்டப் போட்டிகளில் இந்தியாவுக்கு முதலாமிடமும், ஈரானுக்கு இரண்டாமிடமும், இலங்கை அணிக்கு மூன்றாமிடமும் கிடைத்திருந்தது.

இலங்கை கால்பந்தாட்ட. சம்மேளனத்தின் ஆதரவுடன் ஆசிய கால்பந்தாட்ட சம்மேளனத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தப் போட்டித் தொடரில் மத்திய மற்றும் தெற்கு ஆசிய நாடுகளைச் சேர்ந்த 6 அணிகள் பங்குபற்றியிருந்தன. இதில் பூட்டான், ஈரான், ஜோர்தான், இந்தியா மற்றும் பலஸ்தீனம் போன்ற நாடுகளைச் சேர்ந்த அணிகள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மருதங்கேணி கோட்ட மட்ட முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

மருதங்கேணி கோட்ட மட்டப் போட்டி முடிவுகளின் தொடர்ச்சி...

17 வயது ஆண்கள்,

100 மீற்றர் ஓட்டம்

ஏ. அருண்ராஜ், குடத்தனை ஏ.எம்.ரி.எம்.எஸ், எம்.டினோஜன், மருதங்கேணி எச்.ரி.எம்.எஸ், எஸ். விதுசன், அம்பன் ஏ.எம்.ரி.எம்.எஸ்.

200 மீற்றர்

முதலாமிடம் ஏ. அருண்ராஜ், குடத்தனை ஏ.எம்.ரி.எம். பாடசாலை, எ.எட்வேட் சிமியோன் தளன்ராஜ், வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தி, எஸ். பிரியந், ஆழியவளை சி.சி.ரி.எம். பாடசாலை, வி. விஜிதகுமார் (உடுத்துறை ம.வி.)

400 மீற்றர் ஓட்டம்

எஸ். விபூசனன், செம்பியன்பற்று ஜி.ரி.எம்.எஸ்., ஜெ. தேவகாஸ், அம்பன் ஏ.எம்.ரி.எம்.எஸ்., என். யக்சின், வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தி.

800 மீற்றர் ஓட்டம்

எஸ். விபூசனன், செம்பியன்பற்று, ஜி.ரி.எம்.எஸ்., இ. இதயகீதன், குடத்தனை ஜி.ரி.எம்.எஸ்., கே. திசானந், மருதங்கேணி ஏச்.ரி.எம்.எஸ்., ஜெ. துபாகரன், ஆழியவளை சி.சி.ரி.எம்.எஸ்.

1500 மீற்றர் ஓட்டம்.

எஸ். விபூசனன், செம்பியன்பற்று ஜி.ரி.எம்.எஸ், என். யக்சின், வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தி, கே. திசானந்த், மருதங்கேணி எச்.ரி.எம்.எஸ்., எஸ். றொக்சன், செம்பியன்பற்று ஜி.ரி.எம்.எஸ்,

நீளம் பாய்தல்

கே. திசானந்த், மருதங்கேணி எச்.ரி.எம்.எஸ், ரி. தனுசன், உடுத்துறை ம.வி, ஏ. அருண்ராஜ், குடத்தனை ஏ.எம்.ரி.எம்.எஸ்., ஆர். ரஜிதரன், ஆழியவளை, சி.சி.ரி.எம்.எஸ்.

தடை தாண்டல்

என். விஜந், செம்பியன்பற்று ஜி.ரி.எம்.எஸ்..

உயரம் பாய்தல்

எஸ். செந்தூரன், நாகர்கோவில் ம.வி, ரி. தயான், உடுத்துறை ம.வி, ரி. தர்சன், உடுத்துறை ம.வி, ஆர். ரஜிதரன், ஆழியவளை சி.சி.ரி.எம்.எஸ்.

# சமநிலையில் 3ஆவது போட்டி

அவுஸ்ரேலிய, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒரு நாள் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. முதலில் ஆடிய அவுஸ்ரேலிய அணி 49.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 220 ஓட்டங்களைப்பெற்றது. பதிலுக்கு ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 49.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 220 ஓட்டங்களைப் பெற்றது. இதன் மூலம் இப்போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

# ராவிட்டுக்கு பாராட்டுவிழா

(மும்பை)

அண்மையில் ஓய்வுபெற்ற இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர் ராகுல் ராவிட்டிற்கான பாராட்டு விழாவினை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஏற்பாடு செய்துள்ளது. எதிர்வரும் 27ஆம் திகதி மும்பையில் இந்தப் பாராட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பாராட்டு விழாவில் இந்திய அணியின் அனைத்து வீரர்களும், முன்னாள் அணித்தலைவர்களும், வீரர்களும், ராகுல் ராவிட்டின் குடும்பத்தினரும், முன்னாள் மற்றும் இந்நாள் இந்தியக் கிரிகெட் கட்டுப்பாட்டுச் சபை அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தியக் கிரிக்கெட்டிற்கு ராகுல் ராவிட் ஆற்றிய சேவைகளுக்காக இந்தப் பாராட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்திய அணியின் முக்கிய வீரராக இடம்பெற்றிருந்த ராகுல் ராவிட், கடந்த மார்ச் 9ஆம் திகதி கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஹோலிக்கு நெருக்கடி; எச்சரிக்கிறார் சச்சின்



(மும்பை)

சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் விராத் ஹோலி மீது நெருக்கடியைத் திணிக்காதீர்கள் என, சச்சின் தெரிவித்துள்ளார்.

சமீபகாலமாக இந்திய அணியின் துடுப்பாட்டத்தில் அசத்தி வரும் விராத் ஹோலி சிறந்த வீரர். ஆட்டத்தின் தன்மைக்கேற்ப பொறுப்பாக விளையாடி வரும் இவருக்கு நல்ல எதிர்காலம் காத்திருக்கிறது. சிறப்பாக விளையாடிவரும் இவர் மீது அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தி, நெருக்கடியைத் திணிக்கக்கூடாது. அவரது போக்கிற்கு விட்டுவிட வேண்டும். அப்போதுதான் இவர்; இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி சாதிக்க முடியும். ஆசிய கோப்பையில் பங்களாதேஷிற்கு எதிராக சதம் அடித்து, எனது 100ஆவது சர்வதேச சதத்தை எட்டியது மகிழ்ச்சி அளிக்கிறது. இதற்காக நீண்ட நாட்கள் காத்திருக்க வேண்டியதாயிற்று. தற்போது என் மீதான நெருக்கடி குறைந்திருப்பதாக உணர்கிறேன். தொடர்ந்து வரும் போட்டிகளில் சிறப்பான பெறுபேற்றைப் பெற்று அணியின் வெற்றிக்குத் துணைபுரிவேன் எனவும் அவர் தெரிவித்தார்.

# மீண்டும் ஆடவேண்டும் ஆமிர்



(புதுடில்லி)

5 வருடகால போட்டித் தடை விதிக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் அணியின் இளம் வேகப் பந்து வீச்சாளர் மொஹமட் ஆமிர் திரும்பவும் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றினால் சிறப்பாக அமையும் என அண்மையில் ஓய்வு பெற்ற இந்திய அணியின் ராகுல் ராவிட் தெரிவித்துள்ளார்.

மொஹமட் ஆமிர் ஒரு மிகச்சிறந்த வீரர். அவருக்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர் மீண்டும் போட்டிகளில் திரும்ப பங்குபற்றுவார் என நான் எதிர்பார்க்கிறேன். நீண்ட காலங்கள் போட்டிகளில் பங்குபற்றாதிருந்து விட்டு திரும்ப போட்டிகளில் பங்குபற்றுவது கடினம்.

கிரிக்கெட்டை மிகவும் நேசிப்பவன் என்ற ரீதியிலும், இளைய வீரர்கள் சிறப்பாகப் பிரகாசிப்பதை விரும்புபவன் என்ற ரீதியிலும் மொஹமட் ஆமிர் விவகாரம் எனக்கு வருத்தமான ஒன்றாக அமைந்தது. மிகச்சிறப்பாக திறமைகளை உடைய ஒருவர் இவ்வாறு நடந்து கொண்டமை உலகிலுள்ள அனைவருக்கும் கஷ்டமான ஒன்றாக அமைந்ததாகவும் தெரிவித்தார்.

ஆமிர் சில தவறுகளைச் செய்துள்ளார். தனது தவறுகளிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டு சிறந்த மனிதனாக அவர் மீண்டும் வருவார் என தான் எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மெஸ்சி சாதனை

(மாட்ரிட்)

ஷ்ஸ்பானி லா லிகா கால்பந்து போட்டியில் ஹட்ரிக் கோல் அடித்த மெஸ்சி, பார்சிலோனா கால்பந்து கிளப் அணியில் அதிக கோல் (234) அடித்த வீரர்கள் வரிசையில் முதலிடம் பிடித்து புதிய சாதனை படைத்தார்.

ஸ்பெயின் தலைநகர் மாட்ரிட் நகரில், கிளப் அணிகள் பங்கேற்கும் ஸ்பானி லா லிகா கால்பந்து தொடர் நடக்கிறது. லீக் போட்டியில் பார்சிலோனா, கிராணடா அணிகள் மோதின.

இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய பார்சிலோனா அணியின் ஆர்ஜன்ரீன வீரர் லியோனல் மெஸ்சி ஹட்ரிக் கோல் (17, 68, 88ஆவது நிமிடம்) கோல் அடித்து கைகொடுத்தார். ஆட்ட நேர முடிவில் பார்சிலோனா அணி 5-3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இப்போட்டியில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய மெஸ்சி, பார்சிலோனா அணிக்காக இதுவரை 314 போட்டியில் பங்கேற்று 234 கோல் அடித்துள்ளார். இதன மூலம் பார்சிலோனா கிளப் அணிக்காக அதிக கோல் அடித்த வீரர்கள் வரிசையில், முன்னாள் ஸ்பெயின் வீரர் சீசர் ரோட்ரிகுயசை (232 கோல், 351 போட்டி, 1942-55) பின்தள்ளி முதலிடம் பிடித்து புதிய வரலாறு படைத்தார்.

# நிலக்கரி ஏலம் விடப்படாததால்

# அரசுக்கு 10 இலட்சம் கோடி இழப்பு

## மற்றொரு சிக்கலில் மத்திய அரசு

(புதுடில்லி)

நிலக்கரி இருப்புகள் வர்த்தக நோக்குடன் ஏலம் விடப்படாததால் அரசுக்கு ரூபா 10 இலட்சம் கோடி இழப்பீடு ஏற்பட்டதாக மத்திய தணிக்கை அறிக்கையில் கூறப்பட்டுள்ளதால் மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு விவகாரத்தில் ஏற்பட்ட இழப்பீடைவிடக கூடுதலான. இழப்பு இது என்பதால் இவ்விடயம் பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளது.

மின்சார உற்பத்திக்காக அனல்மின்நிலையங்களுக்கு தேவையான நிலக்கரி வர்த்தக ரீதியாக, அரசிற்கு சொந்தமான சுரங்கங்களிலிருந்து ஏலம் விடப்படுகிறது. இவ்வாறு ஏலம்விடப்படாமல் கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் அரசுக்கு ரூபா 10.7 இலட்சம் கோடி இழப்பீடு ஏற்பட்டதாக மத்திய தணிக்கை ஜெனரல் (சி.ஏ.ஜி) கூறியுள்ளது. இது தொடர்பாக சி.ஏ.ஜி. வெளியிட்டுள்ள 110 அறிக்கையில், கூறப்பட்டுள்ளதாவது,

நாடு முழுவதும் அரசிறகு சொந்தமான 155 நிலக்கரி சுரங்கங்களிலிருந்து நிலக்கரி வெட்டி எடுக்கப்பட்டு, அனல் மின்நிலையங்களுக்கு மின் உற்பத்தி மற்றும் சிமெந்து உற்பத்திக்காக வர்த்தகரீதியில் ஏலம் வாயிலாக விற்கப்படுகிறது. இதில் தனியாருக்கு ஏலம் விடப்படாமல் ரூபா 4.76 இலடசம் கோடியும், அரசு பயனபாட்டிற்கு ஏலம்விடாமல் ரூபா 5.88 இலட்சம் கோடி என ரூபா 10.7 கோடி வருவாய் இழப்பீடு ஏற்பட்டுள்ளது.

இந்த வருவாய் கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதி வரை கணக்கிடப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில், கூறப்பட்டுள்ளது.

# அணுமின் உற்பத்தி மையமாக கூடங்குளம் திகழவுள்ளது

## அப்துல் கலாம் தெரிவிப்பு

(சென்னை)



அடுத்த பத்தாண்டுகளில், மிகப் பெரிய அணுமின் உறபத்தி மையமாக கூடங்குளம், உலகில் அடையாளம் காட்டப்படும் என முனனாள் ஜனாதிபதியும், அணு விஞ்ஞானியுமான அப்துல் கலாம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மின் தேவையில் இந்தியா தன்னிற்வடைவதற்கு, அணுமின் உற்பத்தி தேவை என்று உணர, கூடங்குளம் அனுபவம் ஒரு வாயப்பாக அமைந்தது. அணுமின் உற்பத்தி செய்யப்படும் முறை, அணுமின் நிலையங்களின் நம்பகத்தன்மை, அவற்றின் பாதுகாப்பு மட்டுமின்றி, 2030 இற்குள் மின் உற்பத்தியில் தன்னிறைவடைய அணுமின் சக்தி எவ்வளவு அவசியம் என்பதையும் உணர்ந்து கொள்ள, இந்த அனுபவம் உதவியுள்ளது.

இது தொடர்பாக எழுந்த விவாதங்கள், பொதுமக்களின் மனதைத் தூண்டிவிட்டு, அணுமின் சக்தியின் மூன்று கட்டச் செயற்பாடுகளையும், நிலையான எதிர்காலத்துக்கு அது தேவை என்பதையும் புரிந்துகொள்ள வைத்துள்ளது. அடுத்த பத்தாண்டுகளில், கூடங்குளத்தை மிகப் பெரிய அணு மின் உற்பத்தி மையமாக உலகுக்கு அடையாளம் காட்ட, இந்த அணு மின் திட்டம் பயன்படும். இவ்வாறு கலாம் தெரிவித்துள்ளார்.




# நக்சல்கள் உருவாகுவதற்கு அரச பாடசாலைகளே காரணம்

## ரவிசங்கரின் கருத்தால் சர்ச்சை

(சென்னை)

நக்சல்களை வன்முறையாளர்களாக அரச பாடசாலைகளே பெரும்பாலும் உருவாக்குகின்றன என்கிற ரீதியில் கருத்து தெரிவித்த ஸ்ரீலஸ்ரீ ரவிஷங்கரை, மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் கடுமையாகச் சாடியுள்ளார்.

ஒரிசா மாநிலத்தில் இத்தாலிய சுற்றுலாப் பயணிகள் இருவரை நகசலைட்டுகள் கடத்திச் சென்றனர். அவர்களை விடுவிக்க வேண்டுமென்றால் தங்களுக்கு எதிரான தேடுதல் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட 13 நிபந்தனைகளை அவர்கள் விதித்துள்ளனர். பிணைக்கைதிகளாக உள்ள இத்தாலிய சுற்றுலாப் பயணிகளை விடுவிப்பதற்கு ஒரிசா அரசு தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இந்த நிலையில், நக்சலைட்டுகள குறித்து கருத்து வெளியிட்ட ஸ்ரீலஸ்ரீ ரவிஷங்கர், அரச பாடசாலைகளில் படித்தவர்களே நக்சலைட்டுகளாகவும், வன்முறையாளர்களாகவும் உருவாவது மிகுதியாக உள்ளது. தனியார் கல்வி நிறுவனங்களில் படித்தவர்கள் இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவதில்லை. எல்லாவற்றுக்கும் வழிகாட்டிகளும், ஆசிரியர்களுமே பொறுப்பு என்றார்.

ஸ்ரீலஸ்ரீ ரவிஷங்கரின் இந்தக் கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு, மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இப்படி ஒரு கருத்தைக் கேட்டபோது மிகவும் வருத்தமாக இருந்தது. இது உண்மை அல்ல. நான் அரச பாடசாலையில்தான் படித்தேன். நான் நக்சலைட் இல்லையே, என்று அமைச்சர் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

## கட்டண உயர்வு இல்லை

(புதுடில்லி)

பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட ரயில் கட்டண உயர்வு வாபஸ் பெறப்பட்டதாக ரயில்வே அமைச்சர் முகுல் ராய் அறிவித்தார். பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட இரண்டாம் வகுப்பு (படுக்கை வசதி மற்றும் இருக்கை வசதி) மற்றும் மூன்றாம் வகுப்பு ஏ.சி கட்டண உயர்வு மீளப் பெறப்பட்டுள்ளது.

மேலும் முதல் வகுப்பு ஏ.சி மற்றும் இரண்டாம் வகுப்பு ஏ.சி கட்டண உயர்வில் எந்த மாற்றமும் இல்லை. தினேஷ் திரிவேதி அறிவித்த கட்டண உயர்வை முகுல் ராய் திரும்பப் பெற்றார்.

சாமானிய மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு இந்தக் கட்டண உயர்வு மீளப் பெறப்பட்டதாக அறிவித்தார்.

# "இந்தியா சிறந்த நண்பன்" கூறுகிறது அமெரிக்கா

(வோஷிங்டன்)

பொருளாதாரம், பாதுகாப்பு உள்ளிட்ட விவகாரங்களில், அமெரிக்காவிற்கு உற்ற நண்பனாக இந்தியா செயறபடுவதாக அமெரிக்க நாடாளுமன்றக் குழு உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்திய தூதுவர் நிருபமா ராவ், அமெரிக்க நாடாளுமன்றக் குழு உறுப்பினர்களுக்கு விருந்தளித்தார். இந்த விருந்தில், டெக்சாஸ் மாகாணத்திலிருந்து ருபென் ஹினோஜோசா மற்றும் சில் வெஸ்டிரி ரேயஸ்ல கலிபோர்னியா மாகாணத்தில் இருந்து கிரேஸ் நெபோலிடானோ, ஜிம்கோஸ்டா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

அப்போது அவர்கள் கூறியதாவது,

ஜனநாயகம் மற்றும் பல் பதவியாண்மை உள்ளிட்ட விவகாரங்களில், இந்தியா மற்றும் அமெரிக்க நாடுகள் ஒத்துப்போகின்றன. அமெரிக்காவைப் பொறுத்தவரை, இந்தியா மிகச்சிறந்ததொரு நண்பனாகத் திகழ்வதாகவும், இந்த நட்பு வருங்காலங்களிலும் நீடிக்கும் என்ற நம்பிக்கை தங்களுக்கு உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

## திருப்பதியில் கேட்கக்கூடாது



(சென்னை)


திருப்பதி கோவிலுக்கு குடும்பத்துடன் சென்று நடிகை நயன்தாரா வழிபாடு செய்துள்ளார்.

நான் முதன்முறையாக ஏழுமலை தரிசனம் செய்கிறேன். அவரின் அருளும், ஆசியும் பெற வந்தேன். இது எனக்கு மன நிறைவையும், சந்தோஷத்தையும் தருகிறது.

அவரிடம், பிரபுதேவாவுடன் உங்கள் காதல் முறிந்தது ஏன்? என்று நிருபர்கள் கேட்டனர்.

அதற்கு பதில் அளித்த நயன்தாரா, புண்ணிய ஸ்தலத்தில் இது போன்று நீங்கள் கேட்பதும், அதற்கு நான் பதில் சொல்வதும் நன்றாகவா இருக்கும் என புன்னகையுடன் எதிர்க்கேள்வி கேட்டு அங்கிருந்து சென்றார்.

## காத்திருங்கள்... நேரம் வரும் வரை



*நேரம் இன்னும் வராததால் யாரும் அவரைத் தொடவில்லை. உங்கள் நேரம் வரும் வரை யாரும் உங்களையும் தொட முடியாது.* அதுவரை மகிழ்ந்து வாழுங்கள். இயேசுவுக்குச் சான்று பகர்ந்து வாழுங்கள். நன்மைகளைச் செய்து, நல்லவைகளுக்கும் நற்செய்திக்கும் சான்று பகர்ந்து வாழுங்கள். உங்களை யாரும் தொடமுடியாது. தலைமுடி ஒன்றையேனும் அசைக்க முடியாது. துணிவோடு செயற்படுங்கள்.

உங்களைத் துன்புறுத்துவோர் திட்டமிட்டு, வாய்ப்புத் தேடி காத்திருப்பர். கும்பல் எங்கு கூடும், கோயில் திருவிழா எப்பொழுது கொண்டாடப்படும் என்ற யூதர்களும் பரிசேயர்களும் காத்துக்கிடந்தது போல, உன்னை அவமானப்படுத்த, உனக்குப் பொருள் இழப்பு ஏற்படுத்த, உன்னைத் தனிமைப் படுத்தி மனவேதனையைக் கொடுக்க உன் எதிரிகள் காலம் காலமாக, ஆண்டு ஆண்டாக காத்திருக்கலாம், முயற்சி செய்யலாம். உன் நேரம் வரும்வரை யாரும் உன்னைத் தொட உன் தேவன் அனுமதிக்கமாட்டார்.

நீங்கள் அஞ்சவேண்டாம். ஏனெனில் நேரமும் நிமிடமும் இறைவனுடையது. கடைசி துளி நேரம் உன் கையில் இல்லை. இறைவனுடையது. அதுவரை நீ தொடர்ந்து போராடலாம். கடைசி நேரத்தில், நிமிடத்தில் உன்னைக் காப்பார். நம்பிக்கையோடு இத்தவக்காலத்தைப் பரிசுத்தமாகக் கடைப்பிடிக்க எத்தனியுங்கள்.

மறையாசிரியர் - ஜெ.அலெக்ஸ்

## தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்



முதலாவது பிறந்த நாள்

பெயர்: இந்திரபாலா திவர்ஷா
சிவபூதராயர் கோவிலடி,
சுன்னாகம்.

நான்காவது பிறந்த நாள்



பெயர்: திருவருட்சிறி டினோஜன்
பொன்னையாலேன்,
ஆனைக்கோட்டை.

22.03.2012 கொண்டாடினார்

**வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்**

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..................................
முகவரி : ..................................
பிறந்த ஆண்டு : ..................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் ..................................

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# மாலி அரசைக் கைப்பற்றியதாக கிளர்ச்சியாளர்கள் அறிவிப்பு

## -அமைச்சர்கள் கைது

ஆபிரிக்க நாடான மாலியில் இராணுவத்திலிருந்து பிரிந்துசென்ற சிப்பாய்களைக் கொண்ட கிளர்ச்சியாளர்கள் அந்நாட்டு அரசாங்கத்தை கைப்பற்றியுள்ளதாக நேற்று அறிவித்துள்ளனர்.

மாலியின் அரசியலமைப்பு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்க நிறுவனங்கள் கலைக்கப்பட்டுள்ளதாகவும் கிளர்ச்சியாளர்கள் தொலைக்காட்சி மூலம் அறிவித்தனர். இக்கிளர்ச்சியாளர்கள் ஜனநாயகத்தை ஸ்தாபிப்பதற்கான தேசிய குழு எனத் தம்மை அழைத்துக் கொள்கின்றனர்.

மாலி நாட்டின் வடபகுதியில் இடம்பெற்றுள்ள கிளர்ச்சியை அடக்குவதற்கு அரசாங்கம் வலுவற்றிருந்ததால் இப்புரட்சி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.


தலைநகர் பமாகோவிலுள்ள ஜனாதிபதி மாளிகையைக் கைப்பற்றிய கிளர்ச்சியாளர்கள் அமைச்சர்கள் பலரைக் கைது செய்துள்ளதாக அறிவித்துள்ளனர். வெளிவிவகார அமைச்சர் சௌமேய்லோ பௌபேயே மைகா மற்றும் உள்துறை அமைச்சர் கபௌ ஹோனா கோனே ஆகியோரும் கைது செய்யப்பட்டவர்களில் அடங்குவர்.



இதேவேளை, ஜனாதிபதி அமாடோ டௌமானி டோரே ஜனாதிபதி மாளிகையிலிருந்து தப்பிச் சென்றுள்ளதாக சுயாதீன வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏ.எவ்.பி. செய்தி வெளியிட்டுள்ளது.

# கொபிஅனானின் சமாதானத்திட்டம்; சிரிய அரசு ஒத்துழைக்க வேண்டும்

## - அமெரிக்கா கோரிக்கை



(வோஷிங்டன்)

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அரபு லீக்கின் விசேட பிரதிநிதி கொபி அனானின் சமாதான திட்டத்திற்கு சிரியா ஒத்துழைக்க வேண்டுமென அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

இந்த வழிமுறையைப் பின்பற்றி சிரிய ஜனாதிபதி பஷார் அல் அசாத்,அது குறித்து பொறுபபுடன் செயற்பட வேண்டுமென அமெரிக்க இராஜங்கச் செயலாளர் ஹிலாரி கிளிண்டன் கூறியுள்ளார்.

இல்லாவிடின் சிரியா அழுத்தங்களை எதிர்நோக்க நேரிடும் என்பதுடன், தனிமைப்படுத்தப்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளதாக பி. பி. சி. தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப்பேரவையில் முன்வைக்கபட்ட கொபி அனானின் சமாதானத் திட்டம், ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதனிடையே தலைநகர் டமஸ்கஸ்ஸின் புறநகர்ப் பகுதிகளில் சிரிய அரச படையினர்கள் யுத்த டாங்கிகளைப் பயன்படுத்தி தாக்குதல் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இராணுவ நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறித்த தகவல்கள் பதிவாகியுள்ளதாக பி. பி. சி. செய்தி வெளியிட்டுள்ளது.

வன்முறைகளை முடிவுக்கு கொண்டுவருதல், மனிதாபிமான நடவடிக்கைகள் மற்றும் அரசியல் மாற்றத்திற்கு உதவுவது போன்ற நடவடிக்கைகளுக்கு அனானின் திட்டம் முழு ஒத்துழைப்பு வழங்குவதாக பாதுகாப்புப் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அசாத்தின் நடவடிக்கைகளுக்கு கண்டனம் தெரிவிப்பது தொடர்பாக ஐ.நா. பேரவையில் இதற்கு முன்னர் கொண்டுவரப்பட்ட இரண்டு தீர்மானங்களை ரஷ்யா மற்றும் சீனா ஆகியன வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி தடுத்து நிறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது

உலகச் செய்திகள்

# அதிகம் பேர் பணியாற்றும் நிறுவனபட்டியல் வெளியீடு

## முதலிடம் பிடித்தது அமெரிக்க இராணுவம்

(லண்டன்)

உலகில் அதிகம் பேரை வேலைக்கு அமர்த்தியுள்ள நிறுவனம் எது என்ற கேள்விக்கு தற்போது விடை கிடைத்துள்ளது. சுமார் 32 இலட்சம் பேர் அமெரிக்க இராணுவத்தில் வேலை பார்க்கின்றனர்.

அடுத்த இடத்தில் இருப்பது சீன இராணுவம். இதில் இருப்பவர்களோ 23 இலட்சம் பேர். அமெரிக்கா தன் படையில் வேலை செய்யும் சிவிலியன்களையும், மிகவும் அவசரமாகத் தேவை ஏற்படும் போது மட்டுமே படைக்கு அழைக்கப்படும் ரிசேர்வ் துருப்புக்களையும் தனது மொத்த படை எண்ணிக்கையில் சேர்த்துள்ளது. சீனாவைப் பொறுத்தவரை படைவீரர்களின் எண்ணிக்கை மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் வால்மார்ட் சூப்பர் மார்க்கெட்டில் மொத்தம் 21 இலட்சம் பேர் வேலை பார்க்கின்றனர். மெக் டோனால்ட்டில் 19 இலட்சம் பேர் வேலை பார்க்கின்றனர். ஆனால் இந்த நிறுவனங்களின் பல கிளைகள் தனிப்பட்ட முகவர்களால் நடத்தப்படுகின்றன.

ஐந்தாம் இடத்தைப் பிடித்துள்ள பிரிட்டனில் உள்ள தேசிய சுகாதார சேவையில் 17 இலட்சம் பேர் வேலை பார்க்கின்றனர். சீனாவின் தேசிய பெட்ரோலிய நிறுவனத்தில் 16 இலட்சம் பேரும், மற்றொரு அரச நிறுவனமான மின்தொகுப்பு நிறுவனத்தில் 15 இலட்சம் பேரும் வேலை பார்க்கின்றனர்.

இந்தப் பட்டியலில் 14 இலட்சம் ஊழியர்களைக் கொண்ட இந்திய ரயில்வேக்கு எட்டாவது இடமும், 13 இலட்சம் பேர் கொண்ட இந்திய இராணுவத்துக்கு 9 ஆவது இடமும் கிடைத்துள்ளன. ஆப்பிள் ஐ போன், ஐ பேட் போன்றவைகளைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள பாக்ஸ்கான் பத்தாவது இடத்தில் இருக்கிறது. அதன் ஊழியர்களின் எண்ணிக்கை 12 இலட்சம் ஆகும்.

# பபுவா நியூகினியாவில் பாரிய நிலநடுக்கம்

இந்தோனேசியா அருகே உள்ள பபுவா நியூகினியா நாட்டில் நேற்றுக் காலை 8.15 மணியளவில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. தலைநகரம் கொரோகாவில் இருந்து 63 கிலோ மீற்றர் தென்கிழக்குப் பகுதியில் நிலநடுக்கம் உணரப்பட்டது. ரிச்டர் ஸ்கேல் அளவுக்கு 6.7 ஆக இருந்தது.

பூமிக்கு அடியில் 105 கிலோ மீற்றர் ஆழத்தில் இதன் மையம் இருந்தது. நிலநடுக்கத்தால் வீடுகள் பயங்கரமாக குலுங்கின. மக்கள் அலறியடித்து வீட்டை விட்டு ஓடினர். நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்பு பற்றி எந்தவித தகவலும் வெளியாகவில்லை.

நிலநடுக்கப் பகுதி மலைப்பிரதேசமாகும். அங்கு தகவல் தொடர்பு வசதிகள் இல்லை. எனவே சேதம் பற்றிய விபரம் வெளியே தெரியவில்லை என்று கூறப்படுகிறது.

நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதியில் 1 இலட்சத்து 47 ஆயிரம் பேர் வசிக்கின்றனர். 1998ஆம் ஆண்டு பபுவா நியூகினியாவில் நிலநடுக்கம் ஏற்பட்டு 2 ஆயிரத்து 183 பேர் பலியானது குறிப்பிடத்தக்கது. பபுவா நியூகினியா பசிபிக் கடல் பகுதியில் நிலநடுக்கம் அதிகம் ஏற்படும் இடத்தில் உள்ளது.

# பதிவிறக்கப் பெட்டகம்

புத்தகங்கள் புத்திசாலிகள் உலகத்தைச் சேர்ந்தவை என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இந்த விமர்சகர்கள் "அற்புதமான புத்தகம்" என்று அழைப்பது எட்டு வருடத்தில் எண்பது பிரதிகளே விற்கின்றன. "படுமோசம், அபத்தம், காறித்துப்ப வேண்டியது" என்று விமர்சகர்களால் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்ட புத்தகம் நான்கு மாதங்களில் மூன்று பதிப்பு வெளியாகிறது. எல்லாம் தெரிந்ததாகக் காட்டிக்கொள்ளும் விமர்சகர்களை முட்டாள்களாக்கக் கங்கணம் கட்டிக் கொண்டவர்களாகவே உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் பொதுமக்கள் செயற்படுகிறார்கள்.

**– அசோகமித்திரன்**

இன்றுவரையிலும் அம்பலமாகிவிட்ட பொய்களை மட்டுமே அழிக்கும் தெய்வீக ஜ்வாலை ஒன்று தோன்றுமென்றால் உலகத்திலுள்ள சகல நூல்நிலையங்களிலும் அரைப்பங்குச் சேமிப்பு தீக்கிரையாகிவிடும்.

**– சுந்தர ராமசாமி**

குறிப்பிட்ட சில வாழ்நிலைகள் எத்தனையோ மக்களுக்குப் பொதுவாக உள்ளன. இந்தக் குறிப்பிட்ட நிலையில் வாழும் பலருக்கு ஏற்றதான ஒரு மதிப்பீடு, கலைஞர்களின் வழியேதான் உருவாகிறது. இத்தகைய ஒன்றிப்பு இல்லையெனில் கலைஞன் தன்னுடைய மக்கள் மத்தியில் வரவேற்புப் பெற முடியாது. எனவே அவன் படைப்பு அந்த மக்களின் மதிப்பீட்டையே முன்வைக்கிறது. ஆனால் ஒரு கலைஞனின் மதிப்பீட்டில் அந்த சமூகத்துக்குரிய உண்மை இருப்பது போலவே, இதை மறுக்கும் பிறிதொரு மதிப்பீட்டிலும் அந்த சமூகத்துக்கான உண்மை இருக்க முடியும். இதையே கலைஞர்கள் புரிந்துகொள்ள வேண்டும். என் அனுபவத்தின் வழி நான் கண்டடைந்த உண்மைகள் போலவே மற்றும் பல உண்மைகள் இருக்கக் கூடும் என்று புரிந்துகொள்வதே கலைஞனின் ஜனநாயகத்தன்மை ஆகிறது. இத்தகைய வேறுபட்ட மதிப்பீடுகள் இல்லாமல் ஒரே மதிப்பீட்டைக் கொண்டு மட்டும் உலகத்தை முற்றாக விளக்கி விடவும் முடியாது. தானடைந்த உண்மைகளைச் சொல்லி, மற்றையவர்களின் உண்மைகளையும் தேடுவதற்கு மனதை விசாலித்து வைத்துக்கொள்வதே கலைஞனின் கடமையாகிறது.

**– ஞானி**

மனிதனின் மனத்தையோ அல்லது உடலையோ இதப்படுத்தும் பண்டங்கள் உற்பத்தி செய்யப்பட்ட வண்ணம் இருக்கின்றன. இதன் அடிப்படை லாபவேட்கை. இந்தப் பொருட்களை வாங்கினால்தான் வாழ்க்கையின் செழுமை கூடும் என்ற எண்ணத்தை மனித மூளைக்குள் தொடர்ந்து திணித்து வருகின்றன நவீன விளம்பரச் சாதனங்கள். இந்தச் சூழலில் மனிதனும் ஒரு பண்டம்தான். இவ்வாறு பண்டமாகச் சுருங்கும் மனிதன் தன் உயிர்ப்பைச் சிலிர்த்துக் கொள்ள கலைகள் மட்டுமே உதவ முடியும். முக்கியமாக இலக்கியம். ஒவ்வொரு காலத்துக்குமுரிய படைப்பாளி அவ்வக் காலத்தின் புதிய துக்கங்களைப் பதிவு செய்தபடி இருக்கிறான்.

**– அழகரசன்**

சொல்லப்போனால் நாம் எல்லோரும் செக்குமாடுகள்தாம். செக்குமாட்டுத்தனத்தால் மரத்துப் போய்விடாமலிருக்க, உறைக்கும்படியாக கிள்ளிப்போவதுதான் நம் எழுத்தும் அதன் பயனும். இந்தக் கிள்ளல் அரிக்கும் மனதுக்குச் சுகமாகும்; மரத்த மனதுக்குச் சுரணையாகும்.

**– கவிதாசரண்**

ஆதிவாசி சமூகங்கள் பெரும்பாலும் குழந்தைகள் பெரியவர்கள் என்ற வேறுபாட்டினை தங்கள் ஊடாட்டத்தினுள் கொண்டு வருவதில்லை. குழந்தைகளும் பெரியவர்களாகவே பெரும்பான்மையான சூழல்களில் நடத்தப்படுகின்றனர். விளையாட்டுகளையும், கதை சொல்லல்களையும், நடனங்களையும் பயனற்ற கேளிக்கைகளாக ஆதிவாசி சமூகங்கள் கருதுவதில்லை; வாழ்தலின் உன்னத கணங்களாகவே அவை கருதப்படுகின்றன. ஆதிவாசிகளின் கதை சொல்லலின்போதும் விளையாட்டின்போதும் மரம், செடி, கொடிகள், வான், நிலம், நீர், நதி, கடல், காடு, வன விலங்குகள், மனிதர்கள் என அனைத்தும் ஒரேவகை ஜீவன் ததும்பும் யதார்த்தமாகின்றனர். தான் வேறு இயற்கை வேறு என்ற பிரிவினை முற்றிலுமாக அழிக்கப்பட்டதாய் உணர்ந்த நிலையிலேயே கதை கேட்டலும் விளையாட்டும் நடக்கின்றன; அதே சமயத்தில் விளையாட்டின் வெற்றி தோல்விகள் சமூகத்தின் பிற தளங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதில்லை. சடங்குகளாக கதைசொல்லல்களும் விளையாட்டுகளும் அந்நியர்களையும் வரவேற்பதாகவும் ஆதிவாசி சமூக உள் ஒப்பந்தங்களின் இறுக்கத்திற்கு அப்பாற்பட்டவையாகவும் இருக்கின்றன. கற்பனையும், புதுமையும், குழும வரலாற்றின் சூட்சும பதிவுகளும் குழந்தைகளின் விளையாட்டுக்களிலும் கதைகளிலும் இருப்பதாக ஆதிவாசி சமூகங்கள் நம்புகின்றன. ஆதிவாசி சமூகங்களின் இத்தன்மைகள் பரவலாக்கப்பட்டுவிட்ட நாட்டுப்புற கதைகளிலும்கூட காணக்கிடைக்கின்றன.

**– எம்.டி.முத்துக்குமாரசாமி**

## சீருடையுடன் கஞ்சா கடத்திய சிவில் பாதுகாப்பாளர்கள் கைது

சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருவர் சீருடையில் மோட்டார் சைக்கிளில் 2 கிலோ கஞ்சாவைக் கொண்டு சென்றுகொண்டிருந்தபோது புத்தளம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலக விசேட பிரிவினரால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பஹுரிய 15ஆம் மைல்கல் பிரதேசத்தைச் சேர்ந்த சாலியவெவ மற்றும் கருவலகஸ்வெவ பொலிஸ் நிலையங்களில் பணியாற்றுகின்ற சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களே கைதுசெய்யப்பட்டதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து இவர்களை புத்தளம் தில்லையடிப் பிரதேசத்தில் சோதனைக்குட்படுத்தியபோது, 2 கிலோ கஞ்சாவுடன் இவர்கள் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் கூறினர். இவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட இச் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருவரிடமும் விசாரணை மேற்கொண்டுவரும் புத்தளம் பொலிஸார், இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

# சவால்களை எதிர்கொள்ள அரசும், ஜனாதிபதியும் தயார்

## ஐ.ம.மு.தலைவர்கள் தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டின் இறைமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் எதிராக முன்வைக்கப்படும் எந்த ஒரு சவால்களுக்கும் முகம் கொடுக்க அரசாங்கமும், ஜனாதிபதியும் தயாராக உள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணித் தலைவர்கள் தெரிவித்தனர்.

யுத்தத்தை வென்றது போன்று தாய் நாட்டை நேசிக்கும் மக்களின் ஆதரவுடனும், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் உதவிகளுடனும் இந்தப் பாரிய சவால்களையும் வெற்றிகொள்வது உறுதி என்று சுதந்திர முன்னணித் தலைவர்கள் தெரிவித்தனர். இலங்கைக்கு எதிராக எவ்வாறான அழுத்தங்கள் வந்தாலும் எக்காரணத்தைக் கொண்டும் அழுத்தங்களுக்கு அடிபணிந்து அரசாங்கத்தின் கொள்கையை விட்டுக் கொடுக்கப் போவதில்லை என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இலங்கைக்கு எதிராக மனித உரிமைகள் என்ற போர்வையில் அமெரிக்காவினால் ஜெனிவாவில் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை மற்றும் அதன் பின்னணி தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் விசேட செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பில் நடைபெற்றது. கொழும்பில் மகாவலி கேந்திரத்தில் நடைபெற்ற இச் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களும், அமைச்சர்களுமான மைத்திரிபால சிறிசேன, சுசில் பிரேமஜயந்த, டி.யு.குணசேகர, விமல் வீரவன்ச மற்றும் பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகியோர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்.

மனிதாபிமான நடவடிக்கையின் இறுதிக் கட்டத்தின்போது இதுபோன்ற பல்வேறு அழுத்தங்களுக்கும், சவால்களுக்கும் முகம்கொடுக்க நேர்ந்தது. வடக்கு, கிழக்கு, தெற்கு, மத்திய, மலைநாடு என்று நாட்டின் சகல பிரதேசங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சிங்கள. தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளைக் கொண்ட ஐ.ம.சு.மு. அரசாங்கம் பொது மக்களின் ஆதரவுடன் வெற்றி பெற்றது.

அந்த அடிப்படையில் இதுபோன்ற சகல சவால்களையும் முகம்கொடுக்கும், பாரிய சக்தி ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் உண்டு. தேசத்திற்கு சவாலாக வரும் எந்தச் சந்தர்ப்பத்திலும் பொறுப்புவாய்ந்த அரசாங்கம் என்ற வகையில் உரிய நடவடிக்கை எடுத்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

## மன்னாரில் நாளை சர்வமத கலந்துரையாடல்

(மன்னார்)

மன்னார் சர்வோதயம் ஏற்பாடு செய்துள்ள சர்வமத கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை மன்னார் தாழ்வுபாடு வீதியில் அமைந்துள்ள ஞானோதய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மன்னார் சர்வோதய அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் எஸ்.யுகேந்திரன் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

உதயமாகியிருக்கும் யுத்த பிற்காலச் சூழ்நிலையினுள் இனங்களின் ஒற்றுமை, ஒருமைப்பாட்டில் முரண்பாடுகளை தீர்த்துக்கொள்வதின் முக்கியத்துவத்தினை வெளிக்கொண்டு வரும் விதத்தில் இக்கலந்துரையாடல் இடம்பெறுகிறது சமய இன ரீதியான குறுகிய நோக்கம் கொண்ட தடைகளை தாண்டி மனித உறவினை வளர்ப்பதற்கான மனித சிந்தனையை குணப்படுத்துவதினை நோக்கமாகக் கொண்டதாகவும் குறித்த நிகழ்வு இடம் பெறவுள்ளது.

# பிக்குகள் கொலை விவகாரம்; சந்தேக நபர்கள் கைதாகினர்



(கொழும்பு)

கோட்டை ரஜமகா விகாரையின் பிக்குகள் இருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.


இவர்களில் ஒரு சந்தேகநபர் நேற்று அதிகாலை தனமல்வில பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பிக்குகள் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட இரு சந்தேகநபர்களும கொலையுடன் நெருங்கிய தொடர்பு கொணடவர்கள் என அவர் குறிப்பிட்டார்.

மரிஹாண பொலிஸ் நிலைய விசேட பிரிவினரால் இவ்விரு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொலைச் சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## உதவி கோருகிறார்



*புதுக்குடியிருப்பு இரண்டாம் வட்டாரத்தில் வசிக்கும் வீரகத்தி தங்கவேல் தனது மகள் த. சாதனா என்பவருக்கு சிறுநீரக மாற்றுச்சிகிச்சை செய்ய வேண்டியுள்ளதாகவும் இதற்காக ரூபா 13 இலட்சம் தேவைப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.*

*வசதி குறைந்த நிலையில் வசிக்கும் தனக்கு ஜீவ காருண்யம் மிக்கோர் தங்களால் இயன்ற உதவியினை முல்லைத்தீவு இலங்கை வங்கி கிளையின் 70762928 எனும் கணக்கு இலக்கத்திற்கு அனுப்பி உதவுமாறு கேட்டுக் கொள்கிறார். (138)*

# அருங்காட்சியக பாதுகாப்பு உறுதிப்படுத்துவதற்கு முடிவு

(கொழும்பு)

நூதனசாலைகள் திணைக்களத்திற்கு சொந்தமான அனைத்து அருங்காட்சியகங்களினதும் பாதுகாப்பினை உறுதிசெய்வதற்கு தேசிய மரபுரிமைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பாக நூதனசாலைகள் திணைகளப் பணிப்பாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் காந்தி விஜேதுங்க குறிப்பிட்டார்.

இதேவேளை தற்காலிகமாக மூடப்பட்டிருந்த தேசிய அருங்காட்சியகத்தின் கீழ்த்தளம் நேற்று முன்தினம் முதல் பொதுமக்கள் பார்வைக்காக மீளத் திறக்கப்பட்டுள்ளது.

அருங்காட்சியகத்தின் இரண்டாம் மாடியில் தொல்பொருள் களவாடப்பட்ட சம்பவத்தின் போது அங்கு கடமையில் இருந்த ஏழு பேரை சேவையிலிருந்து இடைநிறுத்தியுள்ளதாக தேசிய மரபுரிமைகள் அமைச்சின் செயலாளர் காந்தி விஜேதுங்க குறிப்பிட்டார்.

மக்கள் பார்வைக்காக அருங்காட்சியகத்தை தொடர்ந்தும் மூடி வைப்பது உசிதமானதல்ல எனக் கருதியே கீழ் தளத்தை திறந்துவிட தீர்மானித்ததாக அவர் கூறினார். விசாரணை நடவடிக்கைகள் நிறைவடையும் வரை மேல் மாடியை தொடர்ந்தும் மூடிவைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஜனநாயக விரோத ஆட்சியையே சர்வதேசம் கண்டிக்கின்றது

## கூறுகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கொலை செய்ததற்காக சர்வதேச நாடுகள் இலங்கைக்கு எதிராகச் செயற்படவில்லை.அரசாங்கத்தின் ஜனநாயக விரோத ஆட்சிக்கும் மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கும் எதிராகவே சர்வதேசம் செயற்படுகிறது. அரசாங்கம் ஜெனிவா பிரச்சினையை அரசியலாக்கி மக்களின் உண்மையான பிரச்சினைகளை மூடி மறைக்கக்கூடாது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

7500 ரூபாவால் மூன்று நாய்க் குட்டிகள் கூட சீவிக்க முடியாது. இந்நிலையில் ஒரு குடும்பத்திற்கு தாராளமாக 7,500 ரூபா போதும் என்று அமைச்சர் பந்துல குணவர்தன கூறியமை வேடிக்கையாகும். இது அரசின் முட்டாள்தனத்தையே வெளிப்படுத்தியுள்ளது. இந்நிலை தொடர்ந்தால் அடுத்த லிபியாவாகவே இலங்கை மாறும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் சட்டம், ஜனநாயகம் மற்றும் நல்லாட்சி என்பவை படுமோசமான முறையில் அழிந்து போயுள்ளன.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறே ஐ.நா. கூறுகின்றது. இதனைச்செய்வதில் அரசிற்கு என்ன பிரச்சினையுள்ளது ஒன்றுமே இல்லை. நாட்டில் இராணுவ ஆட்சி காணப்படுவதையோ வடக்கு மக்கள் தொடர்ந்தும் அச்சத்தில் வாழ்வதையோ அனுமதிக்க முடியாது.


அதேபோன்று சுயாதீன ஆணைக்குழுக்கள் மற்றும் சிவில் நிர்வாகம், அரசியல் தீர்வு என்பன அத்தியாவசியமான விடயங்களாகும். இதனை அரசும் ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால், தனது நிர்வாணத்தை மறைத்துக்கொள்ள ஜெனிவாவை அரசு பயன்படுத்துகின்றது என சுஜிவ சேனசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

# மரண தண்டனை

(கொழும்பு)

ஐந்து கிலோ ஹெரோயின் போதைப் பொருளை விமானம் மூலமாக கடத்தி வந்த குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்ட நபருக்கு நீர்கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சிரான் குணரத்ன நேற்று முன்தினம் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

கல்பிட்டியைச் சேர்ந்த 51 வயது நபர் ஒருவருக்கே இவ்வாறு மரண தண்டனை விதித்துத் தீர்பபளிக்கப்பட்டது. இவர் 1989 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 26 ஆம் திகதி இந்தியாவிலிருந்து இலங்கை வந்த போது 5 கிலோ ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டிருந்தார்.



இலங்கைக்கு எதிரான அமெரிக்கத் தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து புறக்கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் தேசிய உரிமைகள் சபையின் சத்தியாக் கிரகமொன்று நடைபெற்றது. பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ உள்ளிட்ட பலர் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டதனைக் காணலாம்.

# இடம்பெயர்ந்த முஸ்லிம்களை வாக்காளர் பட்டியலில் இணைக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் இருந்து இடம்பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தில் வாழ்கின்ற முஸ்லிம்களை வாக்காளர் பதிவேட்டில் உள்வாங்குவதற்கான விசேட செயற்திட்டமொன்றை தேர்தல்கள் திணைக்களம் முன்னெடுக்கவுள்ளது.

முஸ்லிம்களின் எதிர்வரும் புனித ரமழான் மாதத்திற்கு முன்னதாக இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, தேர்தல்கள் ஆணையாளர் கட்சித் தலைவர்களின் சந்திப்பின்போது உறுதியளித்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் செய்தி வெளியிட்டுள்ளது.

புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த 2000 இற்கும் அதிகமான முஸ்லிம்கள் இதுவரை எந்தவொரு இடத்திலும் வாக்காளர்களாக பதிவுசெய்து கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை முல்லைத்தீவிலுள்ள சுமார் 2000 பேர் மாந்தை மற்றும் மன்னார் பிரிவுகளில் வாக்காளர்களாகத் தம்மை பதிவுசெய்துகொள்வதில் எதிர்நோக்கிய சிரமங்கள் குறித்தும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இரட்டைப் பதிவை மேற்கொண்டுள்ள வாக்காளர்களுக்கு தேர்தல்கள் செயலகத்தினால் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்க தகவல் திணைக்கள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதங்களுக்கு உரிய பதிலளிக்காத பட்சத்தில், கடிதம் அனுப்பப்பட்ட பகுதியிலுள்ள பதிவை இரத்துச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் சுட்டிக் காட்டியுள்ளதாக அந்தச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.



கடந்த ஞாயிற்றுக்கிழமை மரணமடைந்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மூத்த உறுப்பினரும், திருகோணமலை மாவட்ட அலுவலகப் பொறுப்பாளருமான வே.ரகுநாதனின் (தோழர் முத்து) இறுதிக் கிரியைகள், அவரது பிறப்பிடமான வெலிகந்தை முத்து காலையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றன.

இதில் ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்), ஈ.பி.டி.பி.யின் தேசிய அமைப்பாளர் பசுபதி சீவரட்ணம், ஈ.பி.டி.பி.யின் சர்வதேச அமைப்பாளர் மித்திரன் உட்பட சக தோழர்கள் கலந்துகொண்டு இறுதி மரியாதை செலுத்தினர்.

# தளர்கிறது கட்டுப்பாடு

(முழங்காவில்)

பூநகரி கமநல சேவை நிலைய எல்லைக்குட்பட்டிருந்த கால் நடைக் கட்டுப்பாடு இம் மாதம் 30 ஆம் திகதியுடன் தளர்த்தப்படவுள்ளதாக கமநலச் சேவை அலுவலர் ந.சுந்தரமூர்த்தி அறிவித்துள்ளார். அதேநேரம் மேட்டு நிலப்பயிர்ச் செய்கையை ஒட்டி காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை மட்டும் கால் நடைகளைக் கட்டாக்காலியாக விடமுடியுமெனவும், இந்த ஒழுங்கு முறையை மீறி நடப்பவர் களின் கட்டாக்காலிகள் பிடிக்கப்பட்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (112)

## அநாதரவான..

பெண்கள் பிரிவுப் பொலிஸ் பொறுப்பதிகாரி அவரை அழைத்துவந்து யாழ்.நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியுள்ளார்.

இப்பெண் மீசாலைப் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் இவர் மன நிலை பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

யுவதியை யாழ்.போதனா வைத்தியசாலை மனநல வைத்தியரிடம் பரிசோதனைக்கு உட்படுத்தி எதிர்வரும் 26ஆம் திகதி மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். (எஸ்)

## நிறைவேறியது...

சமர்ப்பித்திருக்கும் இப் பிரேரணை வாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதை பேரவையின் 40 நாடுகள் வரவேற்றிருப்பதாகவும், பிரேரணை தொடர்பான வாதங்கள் ஆரம்பமாகும் எனத் தெரிவித்து விவாதத்தினை ஆரம்பித்து வைத்தார். பிரேரணையைச் சமர்பித்துள்ள அமெரிக்க தரப்பு பிரிதிநிதி பிரேரணை சமர்பிக்கப்படுவதற்கான நியாயங்களை முன் வைத்ததைத் தொடர்ந்து விவாதத்தில் முதலில் பங்கெடுத்துக் கொண்ட கியூபா இந்தத் தீர்மானத்தினை செப்டெம்பர் மாதம் வரைக்கும் ஒத்திவைத்து இலங்கை அரசின் பணிகளுக்கு கால அவகாசம் வழங்குமாறு கேட்டுக் கொண்டது. ஆயினும் அதனை அமெரிக்கா உடனடியாகவே நிராகரித்தது.

இவ்வாறான நிலையில், இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற் றுள்ளன என்பதனையும், அவை தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனும் அமெரிக்காவின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இத் தீர்மானம் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு ஒரு முழுமையான தீர்வாக அமையாவிடினும், இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தில் தமிழ்மக்கள் பாதிக்கப்பட்டார்கள் என்பதைப் சர்வதேச சமூகம் ஏற்றுக் கொண்டுள்ளது என்பதனை வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கிறது என அவதானிகளும், அரசியற் தலைவர்களும் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

இத் தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா, சிலி, கொஸ்டாரிக்கா, கௌதமாலா, மெக்ஸிகோ, பெரு, உருகுவே, ஆஸ்திரியா, பெல்ஜியம், இத்தாலி, நோர்வே, ஸ்பெயின், சுவிற்சர்லாந்து, அமெரிக்கா, கிறீஸ், ஹங்கெரி, போலாந்து, மோல்டோவா, ருமெனியா, பெனின், கெமரூன், லிபியா, மொரிஸியஸ், நைஜீரியா ஆகிய நாடுகள் வாக்களித்துள்ளன. தீர்மானத்துக்கு எதிராக கொங்கோ, மொரிட்டானியா, உகன்டா, பங்களாதேஷ், சீனா, இந்தோனேஷியா, குவைத், மாலைதீவு, பிலிப்பைன்ஸ், கட்டார், சவூதி அரேபியா, தாய்லாந்து, கியூபா, ஈக்குவடோர், ரஷ்யா ஆகிய நாடுகள் வாக்களித்துள்ளன. வாக்களிப்பில் கலந்து கொள்ளாத நாடுகள் மலேஷியா, அங்கோலா, பொட்ஸ்வானா, புர்கினா பெஸோ, டிஜிபோட்டி, செனகல், ஜோர்தான், கிர்கிஸ்தான்.

அதேவேளை ஒரு சிறிய பிரிவினரின் தேவைக்காக, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்ட பிரேரணை ஊடாக, மனித உரிமைகள் பேரவை தவறான முறையில் வழிநடத்தப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் பேசிய அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கண்ணாடி வீடுகளில் வசிப்போர் மற்றவர் மீது கல்லெறியும் போது, மிகவும் கவனமாக இருக்க வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை பேரவையில், இலங்கை சம்பந்தமாக அமெரிக்கா கொண்டு வந்த யோசனைக்கு பதிலளித்து உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். இலங்கை இந்த யோசனையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது எனவும் இது மனித உரிமை பேரவையின் கொள்கைகளுக்கு முரணானது எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

நோயாளிக்குச் சிகிச்சை அளிப்பதற்கு முன்னர் மருத்துவர்கள் முதலில் தம்மை குணப்படுத்தி கொள்ள வேண்டும் என கூறி, அமைச்சர் தனது உரையை நிறைவு செய்தார்.

## 15 நாடுகள்...

கலந்துகொள்ளாததன் மூலம் தீர் மானத்திற்கு ஆதரவளிக்க மறுத்த 8 நாடுகளுக்கும் நாம் நன்றி தெரிவிக்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் 15 நாடுகள் எதிர்த்தமை மற்றும் 8 நாடுகள் வாக்களிப்பில் பங்குபற்றாத நிலையில் இறுதிமுடிவானது 47 அங்கத்தவர்களைக்கொண்ட மனித உரிமைகள் பேரவையில் 23 நாடுகள் தீர்மானத்தை ஆதரிக்கவில்லை. 24 நாடுகள் அதை ஆதரித்தன. இவற்றுக் கிடையிலான வித்தியாசம் இந்தளவு குறைவானதாகும்.

இந்த அனுபவத்தில் மிக கவலையளிக்கும் விடயம் என்னவென்றால், மனித உரிமைகள் பேரவையில் இடம்பெற்ற வாக்களிப்பானது குறித்த விவகாரத்தின் தகுதி அடிப்படையில் அல்லாமல், தீர்மானத்துடனோ அல்லது தீர்மானம் தொடர்பான நாட்டின் சிறந்த நலன்களுடன் சம்பந்தமில்லாத தந்திரோபாய கூட்டணிகள் மற்றும் ஏனைய நாடுகளின் உள்ளூர் அரசியல் விவகாரங்களின் அடிப்படையில் இடம்பெற்றதாகும். இது மனித உரிமைகள் பேரவை ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கங்களுக்கு முரணானது.

ஏனைய நாடுகளின் உள் விவகாரங்களில் சக்திவாய்ந்த நாடுகள் தலையிட முடிவதற் கான ஆபத்தான முன்னுதாரணம் ஏற்படுத்தப்படும் ஆபத்து குறித்து இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்த பல நாடுகள் உணர்ந்திருந்தன. இது எந்த வகையான விதிமுறைகள் அல்லது அளவுகோல்களினால் நிர்வகிக்கப்படாமல் தேர்தெடுக் கப்பட்ட மற்றும் தன்னிச்சையான செயன்முறையாகும். இலங்கையைப் பொறுத்தவரை, எமது கொள்கையானது அனைத்து விடயங்களும் எமது நாட்டு மக்களின் முக்கியமான நலன்களினால் ஆளப்படுவதாக தொடர்ந்துமிருக்கும். இதில் வேறு எந்த வகையான பரிசீலனைகளுக்கும் இடமில்லை என்றும தெரிவிக்கப்பட்டுள்ளது.

## படை வீரர்...

காரணமாக நேற்று முன் தினம் இரவு அப்பகுதியில் இருந்த கிணறு ஒன்றில் தவறி வீழ்ந்து நீரில் மூழ்கி இறந்தாகத் தெரியவருகின்றது.

கண்டியைச் சேர்ந்த சுமந்தர கிர்சா பிரதீப் ஜெயசேகர (வயது-21) என்ற இராணுவ வீரரே இவ்வாறு நீரில் மூழ்கி இறந்ததாக யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இவரது சடலம் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்காக குறித்த வைத்திய சாலையின் சவச்சாலையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது. (பா)

# 11 ஆவது ஆசியக் கிண்ணத்தை வென்றது பாகிஸ்தான்




(பாகிஸ்தான்)

11ஆவது ஆசியக்கிண்ணத் தொடரின் நேற்றைய இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணி - பங்களாதேஷ் அணியை 2 ஓட்டங்களால் வெற்றிகொண்டு, ஆசியக் கிண்ணத்தை இரண்டாவது முறையாக வெற்றிகொண்டது.

நேற்றைய இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பை தேர்ந்தெடுத்தது. அதற்கிணங்க முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 236 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. 237 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 234 ஓட்டங்களை மாத்திரமே பெற்று, 2 ஓட்டங்களால் வெற்றி வாய்ப்பை தவறவிட்டது.

## சுகாதாரப்....

தீர்க்காத காரணத்தினால் மீண்டும் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதர் சங்கத்தின் பிரதித் தலைவரும், யாழ்.மாவட்ட பொதுச்சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் தலைவருமான க.சதீஸ் தெரிவித்துள்ளார்.

ஊழியர்களுக்கான சீருடைக்கு 15 ஆயிரம் ரூபா, இதுவரை எரிபொருட் செலவாக வழங்கப்பட்ட தொகையை 6 ஆயிரம் ரூபாவால் அதிகரித்து 7 ஆயிரத்து 500 ரூபா வழங்குதல், 10 ஆயிரம் பொது மக்களுக்கு ஒரு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் என்ற விகிதத்தை நடைமுறைப்படுத்தல், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கான பயிற்சிக் காலத்தை அதிகரித்தல் ஆகிய கோரிக்கைகளே முன்வைக்கப்பட்டுள்ளன.

இன்று முதல் எதிர்வரும் புதன்கிழமை வரை போராட்டம் தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## இன நல்லிணக்கத்துக்கு....

மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்ட பிரேரணை நிறைவேற்றப்பட்டதனையடுத்து, அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலாரி ஹிலின்டன் இலங்கை தொடர் பில் வெளியிட்டுள்ள விசேட அறிக்கையொன்றை கொழும்பி லுள்ள அமெரிக்க தூதுவராலயம் நேற்று வெளியிட்டிருந்தது.

குறித்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள் ளது, அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நிரந்த நல்லிண்க்கம் மற்றும் பொறுப்புக் கூறல் ஊடாகவே மாத்திரம் இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியும். இதற்கான சமிக்ஞையை ஐக்கிய அமெரிக்கா சர்வதேச சமூகத்துடன் இணைந்து வழங்கியுள்ளது. அத்துடன், வெளிநாட்டு சமூகம் உதவுதற்கு தயாராகவுள்ளது. அடுத்த கட்ட நடவடிக்கை மிக தெளிவாகவுள்ளது. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட ஆக்கபூர்வமான சிபாரிசுகளை இலங்கை அரசாங்கம் அமுல்படுத்துவதுடன் பொறுப்புகூறலுக்கு தேவையான நடவடிக்கையையும் எடுக்க வேண்டும்.

இது தொடர்பில் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டு சரியான இலக்கினை அடைவதற்கு உதவி செய்யவும் அமெரிக்கா தயாராகவுள்ளது. எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸை விரைவில் சந்திக்கவுள்ளேன். இலங்கை அரசுடன் ஆக்கபூர்வமாக கலந்துரையாடல்களை மேற்கொள்ளவும் உறவினை தொடர்ந்து கட்டியொழுப்பவுள்ளோம். அத்துடன் இலங்கை மக்களுடனான எங்களின் பங்கினையும் பலப்படுத்தவுள்ளோம் என்றார்.

## யுத்தத்தின்...

வழங்க வேண்டுமெனச் சுட்டிக் காட்டியிருந்தோம்.

ஆனால் இரண்டு தரப்புமே இதனை அலட்சியப்படுத்தியிருந்தன என்று தெரிவித்த சுமந்திரன் புலிகளை நாம் ஒருபோதும் ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ளவில்லை எனத் தெரிவித்தார்.

## இந்தியாவுடன்...

இருப்பினும் மற்றுமொரு கட்டத்தில் இந்தியா மாற்று வழியில் எங்களுக்கு உதவும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. எது எவ்வாறாயினும் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான நட்பில் எவ்வித பழுதும் ஏற்படாது என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# பெண்களுக்கு எதிரான வன்முறை யாழ். நகரில் மௌன ஊர்வலம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளைக் கண்டித்து மாபெரும் மௌன ஊர்வலம் ஒன்று நேற்று யாழ்.நகரில் நடைபெற்றது.

மனித உரிமை இல்லமும், தேவை நாடும் மகளிர் அமைப்பும் ஒன்றிணைந்து பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளைக் கட்டுப்படுத்தி இல்லாதொழிக்கும் வகையில் இந்த அடையாள அணிவகுப்பு மௌனப் பேரணியை நடத்தியுள்ளனர்.

நல்லூர் முருகன் ஆலய முனறலில் காலை 9.00 மணிக்கு வீட்டு வன்முறையைச் சித்திரிக்கும் நாடக அரங்கேற்ற த்துடன் ஆரம்பிக்கப்பட்ட இவ் அடையாள மௌனப் பேரணி கோவில் வீதியூடாக யாழ். பிரதான வீதியைச் சென்றடைந்து பின்னர் அங்கிருந்து யாழ்.மாவட்டச் செயலகத்திற்கு வந்தடைந்தது

“பெண்ணைப் பெண்ணாக மதி”, பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தோள் கொடுக்க வாரீர்”, “இச்சை கூடிய மனிதா ஏன் தளிர்களை தின்னுகிறாய்” மகளிர் சக்தி மா பெரும் சக்தி “சவால்களை நோககிப் போராடுவோம் மகளிரின் உரிமைகளை வென்றெடுப்போம்” போன்ற கோஷங்களைக் கொண்ட சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு பெண்கள் பலர் மௌன ஊர்வலத்தில் ஈடுபட்டனர்.

மௌன ஊர்வலத்தின் பின்னர் யாழ்.மாவட்டச் செயலகத்தில் அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரைச் சந்தித்து தேவை நாடும் மகளிர் அமைப்பின் இணைப்பாளர் சுமதி தனபால சிங்கம் மற்றும் மனித உரிமை இல்லத்தின் பெண்கள் பிரிவின் உத்தியோகத்தர்கள் எம்.தர்சினி ஆகியோர் மகஜரினைக் கையளித்தனர்.

அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பெண்களுக்கு எதிரான வன்முறைகளைச் செய்யும் குற்றவாளிகளுக்கு 14 நாட்கள் தடுப்புக் காவல் வைக்கப்பட்டு, பின்னர் போதிய சாட்சிகள் இல்லையெனத் தள்ளுபடி செய்யக் கூடாது என்றும் இது போன்ற விசாரணைகளைத் தாமதிக்காது துரிதப்படுத்த வேண்டும் என்றும்

மேலும், வைத்தியத் துறையினரும் சட்ட வைத்திய பகுப்பாய்விற்காக அனுப்பப்படும் தடயங்கள் உரிய காலத்தில் பகுப்பாய்வு செய்யப்பட்டு சரியான முடிவுகளையும், அறிக்கைகளையும் உரிய காலத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

அறிக்கை தாமதப்படுவதனால் குற்றவாளிகள் தப்பித்துக் கொள்ளவும் மேலும் குற்றங்கள் புரிவதற்கு சாதகமாகவும் அமைகின்றது என்றும் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

இவ் ஆர்ப்பாட்டத்தில் யாழ். மாவட்டத்தின் பல்வேறு மகளிர் அமைப்புக்களின் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எஸ்)

# உணவகங்கள் சீல் வைப்பு சுகாதாரப் பரிசோதகரில் சந்தேகம்

(வவுனியா)

புளியங்குளத்தில் சுகாதார மற்ற உணவகங்கள் என அடையாளம் காணப்பட்ட 5 கடைகளும், கனகராயன் குளத்தில் 3 கடைகளுமாக மொத்தமாக 8 கடைகள் சென்றவாரம் சீல் வைக்கப்பட்டதுடன் உரிமையாளர்களிற்குத் தண்டப்பணமாக 50 ஆயிரம் ரூபாவும் அறவிடப்பட்டது.

இது தொடர்பாகப் பாதிக்கப்பட்ட உரிமையாளர்கள் கருத்துத் தெரிவிக்கையில், வவுனியா மாவட்ட நீதிமன்றில் தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டாகக் கடைகள் தகரத்தில் அமைக்கப்பட்டுள்ளதாகவும், உணவு சுகாதார முறைப்படி பேணப்படவில்லை எனவும் சுகாதாரப் பரிசோதகரால் குற்றம் சுமத்தப்பட்டது.

ஆனால் எமது கடைபோன்று கனகராயன்குளப் பகுதியில் வேறு கடைகளும் இயங்குகின்றன. ஆனால் அக்கடைகளின் மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என தெரிவித்தனர்.

சுகாதாரப் பரிசோதகரின் முறைகேடு ஏதாவது இடம்பெற்றிருக்கலாம் எனத் தெரிவிக்கின்றனர். (12)

# நாட்டை ஆளும் தகுதி சரத் பொன்சேகாவிற்கு இல்லை



முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு நாட்டை ஆட்சி செய்யும் தகுதி கிடையாது என ஜே.வி.பி. கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுபபினர் கே.டி.லால் காந்த தெரிவித்துள்ளார். காலனித்துவ முறைமைக்கு எதிராக குரல் கொடுக்கக் கூடிய ஓர் தலைவரின் சேவையே இந்த நாட்டுக்கு தற்போது தேவைப்படுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டபோது அவர் இதனைக் குறிப் பிட்டுள்ளார். சரத் பொன்சேகாவை விடுதலை செய்யவேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக காட்டியுள்ளார். எனினும், சரத் பொன்சேகாவை விடுதலை செயவது தொடர்பில் அமெரிக்கா காட்டி வரும் கரிசனை சந்தேகத்திற்கு இடமானது என அவர் குறிப்பிட்டுள்ளார். காலனித்துவம் மற்றும் முதலாளித்துவத் திற்கு எதிராக போராடக் கூடிய ஓர் மையமாக இலங்கையை கட்டியெழுப்ப வேண்டும்.

தமிழ் சிங்கள புத்தாண்டுக்கு பதிலாக, தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் புத்தாண்டு அறிமுகப் படுத்தப்பட வேண்டும் எனவும், தமிழ் சிங்கள கலாசாரத்திற்கு பதிலாக,. இலங்கைக் கலாசாரம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# இடமாற்றம் வேண்டும் இல்லையேல் பகிஷ்கரிப்பு

ஆசிரியர்களுக்கான வருடாந்த இடமாற்றங்கள் உரிய காலத்திலிருந்து மூன்று மாதங்கள் தாமதமாகியுள்ளன. இந்த ஆசிரிய இடமாற்றங்கள் உடனடியாக செயற்படுத்தப்படாது போகுமாயின் அரசாங்க பாடசாலை ஆசிரியர்கள் வேலைநிறுத்தப் போராட்டதில் ஈடுபட உள்ளதாக ஆசிரிய சங்கங்கள் தெரிவித்தன. 3,000 இற்கு மேற்பட்ட அரசாங்க பாடசாலை ஆசிரியர்களுக்கு உரிய காலத்தில் இடமாற்றம் வழங்க அரசு தவறியுள்ளமையினால் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் நேற்று வியாழக் கிழமை கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவிற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் 2007 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் படி புதிய வருடத்திற்காக பாடசாலை தொடங்க முன் ஜனவரி மாதத்தில் ஆசிரிய இடமாற்றங்கள் நடக்கவேண்டும். பின்னர் இத்திகதி மார்ச் 3 என மாற்றப் பட்டது. எனினும் இந்த திகதியில் கூட இடமாற்றங்கள் இடம் பெறவில்லை. நாட்டிலுள்ள பல பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை காணப்படுவதால் ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்குவது உடனடி தேவையாகும் என இலங்கை ஆசிரிய சேவை சங்கத்தின் பொது செயலாளர் மஹிந்த ஜெயசிங்க தெரிவித்தார். இந்நிலைக்கு கல்வி அமைச்சும் மாகாண கல்வி அதிகாரிகளுமே பொறுப்பானவர்கள் என ஆசிரியர் சேவை சங்கம் கல்வி அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாலபே தனியார் வைத்தியக் கல்லூரி ஜனாதிபதியிடம் அறிக்கை கையளிப்பு

மாலபே தனியார் வைத்தியக் கல்லூரி அமைப்பது தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக் கப்பட்டது.

அலரி மாளிகையில் வைத்து சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேன இந்த அறிக்கையைக் கையளித்தார். இது தொடர்பான நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க- நிதியமைச்சின் செயலாளர் பி.பி. ஜயசுந்தர- சுகாதார அமைச்சின் செயலாளர் ரவீந்திர ருபேரு ஆகியோர் உட்பட முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

# பூஜித ஜயசுந்தரவிற்கு புதிய பொறுப்பு



பொலிஸ் போக்குவரத்து, குற்றவியல் விசாரணை மற்றும் பொலிஸ் பயிற்சி பிரிவுகளுக்குப் பொறுப்பாக சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர நியமிக்கப்பட்டுள்ளார். நாட்டில் அதிகரித்துள்ள போக்குரவத்து நெருக்கடி மற்றும் குற்றச் செயல்களை உடனடியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் பொருட்டே அவரிடம் மேற்படி பிரிவுகள் ஒப்படைக்கப் பட்டுள்ளன. என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சருமான அஜித் ரோஹண தெரிவித்தார். இவர் குருணாகல் மாவட்டத்துக்குப் பிரதிப் பொலிஸ் மா அதிபராக கடமையாற்றியவர் என்பது குறிப் பிடத்தக்கது.

# சாரம் அணிந்தவாறு குடிக்கவேண்டாம்

(யாழ்ப்பாணம்)



மதுபோதையில் பஸ் ஏறிய குடிமகன்தன் சுயகட்டுப்பாடு இழந்து, அணிந்த சாரம் அவிழ்ந்து விழுந்த சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோககிச் சென்ற 750 இலக்க பஸ்ஸிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

ஆனைப்பந்திப் பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. ஆனைப்பந்திப் பகுதியில் இருந்து பஸ்ஸில் ஏறிய பயணி போதையால் தன்னைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டார். இவரது செய்கையால் வெறுப்புற்ற ஏனைய பயணிகள் முணுமுணுத்தவாறு பயணம் செய்தமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

அதிக போதை ஏற்றுபவர்கள் சாரம் அணிவதைத் தவிர்க்க வேண்டும் என்று சில குடிமக்கள் அறிவுரை கூறியதையும் கேட்கக் கூடியதாக இருந்தது.




**ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் முன் வைக்கப்பட்டுள்ள பிரேரணைக்கு எதிர்ப்பு தெரிவித்து, நாடாளுமன்ற கட்டடத் தொகுதிக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்றுப் பகல் இடம்பெற்றது. பிரதமர் உள்ளிட்ட அரசாங்க தரப்பு நாடாளுமன்ற உறுப் பினர்கள் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படுகின்ற குற்றச் சாட்டுக்கள் மற்றும் அதற்கு ஆதரவு தெரிவிக்கின்றவர்களுக்கு எதிராக இந்த கண்டன ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

# ஆட்கொணர்வு மனுவிற்கு ஆட்சேபனை தெரிவிக்க அவகாசம்

குகன் முருகானந்தன் மற்றும் லலித் குமார் ஆகியோர் யாழ்பாணத்தில் காணாமல் போனமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த இரண்டு ஆட்கொணர்வு மனுக்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிவாதிகள், ஆட்சேபனையை தாக்கல் செய்வதற்கு மார்ச் மாதம் 30 ஆம் திகதி வரை நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியுள்ளது. இந்த மனுக்கள் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதவான்களான டபிள்யூ.எல்.ரஞ்ஜித் சில்வா மற்றும் எச்.என்.ஜே. பெரேரா ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 மார்ச் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.